I have decided to follow Jesus! (TAMIL)

# இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!

புதிய சீடருக்கும்
முதிர்ந்த கிறிஸ்தவருக்கும்
தற்பரிசோதனை

R.ஸ்டான்லி

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!

புதிய சீடர்களுக்கும்
முதிர்ந்த விசுவாசிகளுக்கும்
ஒரு தற்பரிசோதனை

**R. ஸ்டான்லி,** B.E., M.Tech.

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>

I have decided to
FOLLOW JESUS! (Tamil)

Copyright 2017 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006 India
Tel: 00 91 98437 07600

First Edition : May 2017
This Third Edition: March 2018

இச்சிறுநூல் ஆங்கிலத்திலும் உண்டு.
இந்தியாவின் பிற மொழிகளில்
மொழியாக்கம் நடந்துகொண்டிருக்கிறது.

1963இல் ஆசிரியர் காரைக்குடியில் நிறுவிய
கல்லூரி வளாக ஜெபக்குழுவின் 53ஆம் ஆண்டு
நிறைவு விழாவில், 2017 ஜனவரி 28 அன்று,
இச்செய்தி அதே நகரில் அவரால் பிரசங்கிக்கப்பட்டது.

விலை ரூ. 15/-

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

# உள்ளே ...


1. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்! ... 5

2. ஆத்துமாதாயப்பணியில் ... ... 6

3. பரிசுத்தமாய் வாழ்ந்திட ... ... 12

4. முக்கியமானவற்றை வரிசைப்படுத்துவதில் ... 18

5. பொருளாதாரச் சிந்தைக்கு எதிராய் ... ... 23

6. வசதிகளைத் தியாகம்பண்ணுவதில் ... ... 29

7. நான் விரும்புவதைச் செய்யமுடியாதபோது ... 32

8. அன்புகூருவதில் ... ... 38

9. முழுநேரப் பணிக்கான அழைப்பில் ... ... 45

10. வழிவிலகல்களைத் தவிர்ப்பதில் ... ... 49

11. பாடனுபவிப்பதில் ... ... 54

12. முடிவுரை .... ... 58

இயேசுவைப் பின்பற்ற விரும்பினால்

அதற்குக் கிரயம் செலுத்தவேண்டும்;

அவரைப் பின்பற்ற விரும்பாவிடில்

இன்னும் அதிகம் கிரயம் செலுத்தவேண்டும்!

# 1

# இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!

இயேசுவை ''விசுவாசிப்போர்'' பலர்; அவரைப் ''பின்பற்றுவோரோ'' சிலர். கிறிஸ்தவ வாழ்வில் பிறப்பு என்பது கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால்; ஆனால் வளர்ச்சி என்பது அவரைப் பின்பற்றுவதாலேயே. அநேகர் ''இயேசுவிடம்'' வருவர்; வெகு சிலரே ''அவரைப்'' பின்பற்றுவர். இந்த இரண்டாம் அம்சம் வலியுறுத்தப்படாததாலேயே இரட்சிக்கப்பட்டவர்களிடையே பின்மாற்றம் அதிகம். இயேசுவின்மீது விசுவாசம் வைப்பதால் சிலாக்கியங்கள் பெறுகிறோம்; அவரைப் பின்பற்றினாலோ பொறுப்புகள் ஏற்க வேண்டும். இயேசுவிடம் வருவதால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்; அவரைப் பின்பற்றினால் நாம் பிறர்க்கு ஆசீர்வாதமாவோம்.

''கிறிஸ்து இயேசுவுக்குள் ஒவ்வொருவரையும் தேறினவராய் நிறுத்துவதே'' அப்போஸ்தலரின் தணியாத் தாகமாயிருந்தது. இதற்காக அவர்கள் கிறிஸ்துவையே ''பிரசங்கித்து,'' அவரைப் பற்றியே ''போதித்து,'' வழிவிலகிவிடாதபடி மக்களைக் கண்டிப்புடன் ''எச்சரித்தனர்'' (கொலோ 1:28). கிறிஸ்தவ வாழ்வு ஓர் ''ஓட்டப் பந்தயத்திற்கு'' ஒப்பிடப்பட்டுள்ளது. அதின் துவக்கம் முதல் முடிவு வரை துவக்கமானவரும் முடிவுமானவருமாகிய இயேசுவின் மீதே கண்களைப் பதித்திருக்கவேண்டும் (எபி 12:1,2).

இயேசுவைப் **''பின்பற்றுதல்''** என்ற கருப் பொருளில் புதிய ஏற்பாட்டை ஆராய்ந்துபார்த் தேன். இந்த ஆராய்ச்சியின் விளைவாக பத்து தற்பரிசோதனைக் கேள்விகள் எழுந்தன. நாம் எவ்வளவு நெருக்கமாய் அல்லது தூரத்தில் இயே சுவைப் பின்பற்றுகிறோமென்று இக்கேள்வி களின் அடிப்படையில், திருவசன வெளிச்சத்தில், நம்மை ஆராய்ந்து பார்ப்போம். இத்தியானம் நம் மைக் குற்றப்படுத்த அல்ல, நம்மை உணர்த்து வித்துத் திருத்துவதற்காகவே.

## 2

## ஆத்துமாதாயப்பணியில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

தம்மைப் பின்பற்றி வரும்படி இயேசு கொடுத்த முதல் அழைப்பு மத்தேயு 4:19இல் உண்டு: ''என் பின்னே வாருங்கள்; உங்களை மனிதரைப் பிடிப்போராக்குவேன்.'' இந்த அழைப்பு சீமோன் பேதுருவுக்கும் அவரது சகோதரன் அந்திரேயாவுக்கும் கொடுக்கப்பட்டது. அவர்கள் ''உடனே'' கீழ்ப்படிந்தனர் (வச 20).

மற்றவர்களைக் கிறிஸ்தவராக்கவே நாம் கிறிஸ்தவராயிருக்கிறோம். மற்றவர்களை ஆசீர் வதிக்கவே நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். ஆன்ட்ரூ முரே (1828-1917) என்ற பக்தன் கூறி யது: ''கிறிஸ்தவர்களில் இரண்டே வகுப்பினர் தான் உண்டு: ஆத்துமாதாயகர், பின்மாற்றக்காரர்!'' இவ்விதக் கூற்று சற்றுக் கடினமாய்த் தோன்ற லாம்; ஆனால் இயேசு சொன்னது இதுவே. மத்

12:30, ''என்னோடு இராதவன் எனக்கு விரோதி யாயிருக்கிறான்; என்னோடு சேர்க்காதவன் சிதற டிக்கிறான்!'' இதைப் புரிவதோ ஏற்பதோ சிரமம் என்றாலும், இயேசுவைப் பொருத்தவரை, ஒன்று நாம் அவரிடம் மக்களைக் கொண்டுவருகிறோம், அல்லது மக்களை அவரிடமிருந்து துரத்திவிடு கிறோம். இதுதான் புரட்சிகரமான சீடத்துவம். பிர பல கிரிக்கெட் வீரர் C.T. ஸ்டட் (1862-1931) என்பவர் ஆத்துமாதாயப்பணியில் தீவிரம் காட் டாத கிறிஸ்தவரைப் ''பஞ்சு மிட்டாய்க் கிறிஸ்த வர்'' என்றழைப்பார்.

ஆத்துமாதாயத்தையே தமது ''உணவு'' என்றார் இயேசு. யோ 4:34, ''என்னை அனுப் பினவரது விருப்பத்தின்படிச் செய்து, அவரது பணியை முடிப்பதே எனது உணவு.'' அன்று அந்தச் சமாரியப் பெண்மணியை இறையரசிற்காய் ஆதாயம்பண்ணி, அடுத்து அவளது கிராமம் முழு வதிலுமிருந்து அநேக ஆத்துமாக்களை அறுவடை செய்த சூழலில் இயேசு இவ்வார்த்தைகளைக் கூறினார் (வச 35,39-41). தொலைந்துபோன ஆத்துமாக்களைக் குறித்த இவ்விதக் கரிசனை இயேசுவைப் பின்பற்றுவோரைக் கவ்விப் பிடிக்க வேண்டும்.

அவரது வாழ்நாளில் இயேசுவுக்கு இருந்தது போல் எவருக்கும் அவ்வளவு வேலைப்பளு இருப்பது சாத்தியமல்ல. 40 மாதங்களில் அவர் முடிக்கவேண்டியது இமயம்போலிருந்தது. அகில வுலக நற்செய்திப்பணிக்குத் திட்டம் வகுத்து, அதற்குப் பணியாட்களைப் பயிற்றுவிப்பது அவ் வளவு சுலபமா? அவரது உபதேசங்களைக்

கேட்கவும் அவரால் உடல்நலம் பெறவும் பெருங் கூட்டம் அவரிடம் வந்தது. சாப்பிடக்கூட அவருக் கும் சீடருக்கும் நேரமில்லாத அளவு மக்கள் வரு வதும் போவதுமாயிருந்தனர் (மாற் 6:31). வேக மாய் வளர்ந்து வந்த அவரது ஊழியத்தினால் அவரது தூக்க வேளை குறைந்து வந்தது. ஆனா லும் யூதருக்குப் பயந்ததினால் இரவு வேளைகளி லேயே அவரைத் தேடி வந்த நிக்கொதேமு போன் றோருக்கு நேரம் ஒதுக்க இயேசு தயங்கவில்லை (யோ 3:2; 19:39). ஆத்துமாதாயம் செய்ய முடி யாத அளவு அவர் எப்பொழுதும் களைப்படைய வில்லை.

மிஷனரிகளை அனுப்புகிறவராக மட்டுமல்ல, களங்களுக்குப் போகிறவராகவும் இயேசு செயல் பட்டார். இறையரசின் நற்செய்தியைப் பரப்பும் படிப் பன்னிரு சீடரை அனுப்பிவைத்தபின் அவர் களது நகர்களில் பிரசங்கிக்க இயேசுவும் புறப் பட்டுச் சென்றார் (மத் 11:1). இயேசுவின் இப் பாணியை லூக்கா இவ்விதம் பதிவு செய்கின்றார்: ''கர்த்தர் வேறு எழுபது பேரை நியமித்து, தாம் போகும் எல்லா நகர்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராய் அனுப்பினார்.'' அது 12 அப்போஸ்த லரோ, 70 சுவிசேஷகரோ, அவர்களை அனுப்பி வைத்தபின் இயேசுவும் அவ்விடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார்! மிஷனரி இயக்கங்களின் நிர்வாகத் தலைவர்களுக்கு என்னே படிப்பினை! இன்னும் கூடுதல் மிஷனரியியலர் அல்ல, இன் னும் அதிகம் மிஷனரிகளே இன்றையச் சபையின் தேவை! ''போ அல்லது அனுப்பு,'' ''போ அத்து டன் அனுப்பு'' போன்ற முழக்கங்களில் எளிய

தையே தெரிந்துகொண்டு கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் ஆத்துமாதாயகராயல்ல, ஆதரவாளர்களாகவே இருந்துவிடுகின்றனர். உலகம் இன்னும் நற்செய்திமயமாகாது இருப்பதில் ஆச்சரியமென்ன?

நமது மிஷனரிப்பணி வாஞ்சையை அனலாய்க் காத்துக்கொள்வது அவசியம். இயேசுவின் தீபத்திலிருந்து நமது தீபங்களைக் கொளுத்திக் கொள்வோம். சொந்தவூரை விட்டுப் புறப்படுவது சுலபமல்ல. இயேசு தமது சொந்தவூராகிய நாசரேத்தை விட்டுக் கலிலேயாவிலுள்ள புறவினத்தாரை ஆசீர்வதிக்கும்படி நப்தலிக்குப் புறப்பட்டார் (மத் 4:13-15). ''இருளில்'' இருப்போர் ''பெரிய வெளிச்சத்தைக்'' காணுவதற்காகவே இப்படிச் செய்தார் (வச 16). ''மற்ற நகர்கள், வேறே ஆடுகள்'' என்ற பாரம்தான் இயேசுவை அழுத்திக் கொண்டிருந்தது (லூக் 4:42,43; யோ 10:16). நான் இதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா, அல்லது ஆத்தும பாரத்தை இழந்துவிட்டேனா?

அகிலவுலக நற்செய்திமயம் எனும் தரிசனத்தை இயேசு ஒருபோதும் இழந்ததாகத் தெரியவில்லை. அவரது உவமைகளில் பெரும்பாலானவை இறையரசைப் பற்றியவையே. அவர் விருந்தொன்றில் உட்கார்ந்திருக்கையில் ஒரு பெண்மணி அவர் பாதங்களில் விலையுயர்ந்த வாசனைத் தைலத்தை ஊற்றியபோது அவ்வீடு முழுவதும் நறுமணமாயிற்று. இயேசுவின் நற்செய்தியறிவிப்பின் வேட்கை உடனே அகிலவுலகும் நற்செய்திமயமாதலை அவரது கற்பனைக்குக் கொண்டு வந்தது (மாற் 14:9). நமது தரிசனம் மங்கும்

போது, நமது செயல்பாடுகளிலெல்லாம் நோக்கத்தையும் நடத்துதலையும் இழக்கிறோம். பழைய ஏற்பாட்டுப் பகுதிகளை நன்றாய் அறிந்திருந்த இயேசுவின் மனதில் ஏசாயா 6:3, ஆபகூக் 2:14 போன்ற வசனங்கள் மலர்ந்தவண்ணம் இருந்தன. பரிசுத்தமும் பக்தியுமான கற்பனைகள் நமது தரிசனத்தைக் கூர்மையாய் வைத்துக்கொள்ளும்.

ஜெபமும் ஆத்துமாதாயமும் பிரிக்க முடியாதவை. ஜெபத்திலேயே மிஷனரி இயக்கங்கள் பிறக்கின்றன. ஆத்துமாதாயகன் தேவனுக்காய் மனிதருக்குமுன் நிற்கிறான். மனிதருக்குமுன் செல்லுமுன் அவன் தேவனைச் சந்திக்கவேண்டும். இயேசுவின் அனுதினக் கடமைகளில், இரவு மணி நேரங்கள் ஜெபத்திற்கும், பகல் வேளை பிரசங்கிப்பதற்கும் குணமாக்குவதற்கும் செலவழிக்கப்பட்டன (லூக் 21:37,38). தமது சீடர் மூலம் சீடராக மாறவிருந்தோருக்காய் இயேசு தமது பிரதான ஆச்சாரிய ஜெபத்திலேயே மன்றாடிவிட்டார் (யோ 17:20,21). இன்று பரலோகில் அவரது ஜெப ஊழியமும் தேவனிடம் புதிதாய் வருபவருக்காகவே பிரதானமாய்த் தொடர்கிறது (எபி 7:25). ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காய் வேண்டிட நமது ஜெப வேளையில் எவ்வளவு நேரம் ஒதுக்குகிறோம்? (1 தீமோ 2:1-4).

பிலாத்துவுக்குமுன் இயேசு சாட்சி பகர்ந்தது இணையற்றது (யோ 18:37). இங்கு அவர் கூறிய வார்த்தைகளே ஒவ்வொரு ஆத்துமாதாயகனின் இலட்சியமாயிருக்கவேண்டும்: ‘‘சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகில் வந்தேன்!’’ ஆம், நம் ஒவ்

வொருவரின் அறிக்கையும் இப்படித்தான் இருக்க வேண்டும்: ''சத்தியத்திற்காய்ச் சாட்சி பகரவே நான் மறுபடி பிறந்தேன்; அதற்காகவே உயிர் வாழ்கிறேன்!'' நாம் இப்படிச் சொல்ல முடியுமா? தைரியமாய்ச் சாட்சி பகர்வதற்கு முன்மாதிரியாய் இயேசுவை நினைத்துக்கொள்ளும்படி தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுறுத்தினார் (1 தீமோ 6:14). எவ்விதப் பிரச்னையும் வேதனையும் ஆத்துமாதாயகனைப் பணியாற்ற முடியாதபடி முடக்கக் கூடாது. சிலுவையில் தொங்கும்போதும் இயேசு ஆத்துமாதாயகராவே இருந்தார் (லூக் 22:42,43)!

இயேசுவை நெருக்கமாய்ப் பின்பற்றத் தவறும்போதுதான் ஆத்துமாதாயப்பணியில் நாம் குளிர்ந்துபோகிறோம். இயேசுவைச் சீமோன் பேதுரு ''தூரத்தில்'' பின்பற்றியபோதே அவரை மறுதலித்தார், சபித்தார் (லூக் 22:54). நாம் ஒருவேளை இயேசுவை மறுதலியாமலிருக்கலாம்; ஆனால் அவிசுவாசிகளுக்குமுன் இயேசுவுக்காய் வாய் திறவாது மவுனமாயிருந்தால் அது அமைதியான மறுதலிப்புதானே? இயேசுவையும் அவரது வார்த்தைகளையும் பற்றி நாம் வெட்கப்படுவானேன்? அவர் நமக்காய் மாளவில்லையா? நாம் அவருக்காய் வாழக்கூடாதா? நாம் தன்னலத்திற்கு மறுப்பு தெரிவித்து, கிறிஸ்துவின் சிலுவை சுமந்து அவரைப் பின்பற்றினால், அவரையும் அவரது வார்த்தைகளையும் குறித்து ஒருபோதும் வெட்கப் படமாட்டோம் (லூக் 9:23,26).

3

## பரிசுத்தமாய் வாழ்ந்திட இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

இயேசுவைப் "பின்பற்றுதல்" எனும் நமது கருப்பொருளைத் தழுவிய இரு வசனப்பகுதிகள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் உண்டு. வெளி 14:4,5, "ஆட்டுக்குட்டியானவர் எங்குச் சென்றாலும் அவரைப் **பின்பற்றுகிறவர்கள்** இவர்களே ... இவர்களது வாயில் கபடு காணப்படவில்லை; இவர்கள் தேவனது சிங்காசனத்திற்குமுன் மாசு இல்லாதவர்களாயிருக்கிறார்கள்." வெளி 19:14, "பரலோகிலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய ஆடையணிந்தவர்களாய், வெள்ளைக் குதிரைகள்மேல் ஏறி, அவருக்குப் **பின்சென்றார்கள்**." பரிசுத்தமாய் வாழ்வதையும் இயேசுவைப் பின்பற்றுவதையும் என்னே அருமையாய் இவ்வசனங்கள் இணைக்கின்றன!

இவ்வுலகிற்குள் நுழையுமுன் தமது பிதாவானவரிடம் பரலோகில் அளித்த தமது பிரிவுரையிலேயே பரிசுத்த வாழ்வை இயேசு குறிப்பிட்டார். எபி 10:5,7, "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை; ஓர் உடலை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் ... தேவனே, உமது சித்தத்தின்படிச் செய்ய, இதோ, வருகிறேன்." இது சங்கீதம் 40: 6-8இலிருந்து எடுத்தாளப்பட்டது. மார்க்கப் பக்தி அல்ல, பரிசுத்த வாழ்வே தேவனைப் பிரியப்படுத்தும் எனும் சத்தியத்தை இங்கு இயேசு நிலை நிறுத்துகிறார். மனுவுடலெடுத்தபோதே இயேசு

வானவர் ''பரிசுத்தமுள்ளவர்'' எனப்பட்டார் (லூக் 1:35). இயேசுவைப் பின்பற்றும் எவரும் வாழ்நாள் முழுவதும் பரிசுத்தமாய் வாழ்ந்திடத் தன்னை அர்ப்பணிக்கவேண்டும்.

மனந்திரும்பி விட்டுவிடவேண்டிய பாவமோ, கழுவப்படவேண்டிய பாவமோ எதுவும் இயேசு விடம் இருந்ததில்லை. யோவான் கொடுத்ததோ ''மனந்திரும்புதலுக்குரிய'' ஞானஸ்நானம்! அப்படியானால் இயேசு ஞானஸ்நானம் பெறத் தேவையென்ன? யோவானுக்குமுன் இயேசு வைத்த ஒரே காரணம் ''எல்லா நீதியையும்'' நிறை வேற்றவேண்டும் என்பதே (மத் 3:15). அவர் ''நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (எபி 1:9). நீதியை முழுமூச்சாய் நேசித்தார்; அநீதியை முழுமூச்சாய் வெறுத்தார். இயேசுவைப் பின்பற்றும் என்னிடம் இவ்வித மனப்பான்மை உண்டா?

''பரிசுத்தமாயிருங்கள்'' என்று விண்ணிலி ருந்து தந்தையானவர் சொல்லுகிறார். ''நான் பரிசுத்தமாயிருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தமா யிருங்கள்'' என்று நமக்குப் பூரண மாதிரியாய்த் திகழுபவர் குமாரனானவர்தான்! அவரைப் பின் பற்றும் அத்தனைப் பேருக்கும் நடைமுறையான மாதிரியானவர் இயேசுவே. ''எல்லாக் காரியங் களிலும்'' நம்மைப்போல் அவர் சோதிக்கப்பட்டும் ஒரு முறைகூட அவர் சோதனையில் விழவில்லை (எபி 4:15). பரிசுத்தமற்ற இவ்வுலகில் பரிசுத்த மாய் வாழ்வது எவ்வளவு கடினம் என்று அவருக்கு நன்றாகவே தெரியும். விடுதலையாய்ச் சோத னைக்காரன் எங்கும் சுற்றித் திரியும் இவ்வுலகில்

சோதனைகளை மேற்கொள்வது எவ்வளவு சிரமம் என்று இயேசு அறிவார். ''உடலின் துராசையை யும், கண்களின் இச்சையையும், வாழ்வின் பெரு மையையும்'' மேற்கொள்வது எத்தனைப் போராட் டம் என்று அவர் அறிவார் (1 யோ 2:16). இயேசு வின் 40 நாள் உபவாசத்தைத் தொடர்ந்து இம் மூன்று பகுதிகளிலும் பிசாசு அவரை மிதமிஞ்சி சோதித்தான் (லூக் 4:1-13). இயேசுவோ விடாப் பிடியாய் நின்று அவனைத் தோற்கடித்தார். கிருபா சனத்தருகில் அவரது உதவி நாடி ஓடும்போது எல்லாப் பாவச் சோதனைகளையும் மேற்கொள்ள அவர் நடைமுறையில் நமக்கு உதவுகிறார் (எபி 4:15,16).

பிதாவானவரிடம் இயேசுவானவர் ஏறெடுத்த பிரதான ஆச்சாரிய ஜெபத்தில் பரிசுத்தமாகுத லைக் குறித்த முக்கியமானதொரு கூற்று உண்டு: ''அவர்களும் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட வர்களாகும்படி, அவர்களுக்காய் நான் என்னையே பரிசுத்தமாக்குகிறேன்'' (யோ 17:19). தேவன் என்ற வகையில் இயேசு பரிசுத்தர், பரிசுத்தர், பரி சுத்தர்! மனுவுடலில் அவர் இவ்வுலகில் உதித்த போது தமது பூரண பரிசுத்தத்தை இழக்கவில்லை. அப்படியானால் அவர் தம்மைப் பரிசுத்தமாக்கு வதாய்ச் சொல்வதின் பொருளென்ன? எவ்விதமும் கறைப்படாது தம்மைக் காத்துக்கொள்ள நெடு கவே அவர் எடுத்த முயற்சியையே இது குறிப்பிடு கிறது. பிரியமானவரே, நாம் ஒருபோதும் நமது பிடிப்பைத் தளர்த்திவிடக்கூடாது. நம்மை அடித்து வீழ்த்த பிசாசானவன் எப்பொழுதும் வாய்ப்பு தேடியலைகிறான். நாம் மனதில் திடமாகவும், ஆவியில் உற்சாகமாகவும் இருக்கலாம்; ஆனால்

பலங்குன்றிய உடலுக்குள் அல்லவா வாழ்கி றோம்? இருள் சூழ்ந்த வேளையில் இச்சத்தியத் தைத் தமது சீடருக்கு இயேசு நினைப்பூட்டி அறி வுறுத்தியது: ''சோதனைக்குள் விழுந்துவிடாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்'' (மத் 26: 41). ''நான் என்னைப் பரிசுத்தமாக்குகிறேன்'' என்ற இயேசுவின் கூற்றில் இன்னொரு உண்மை யும் வெளிப்படுகிறது. சாகக்கூடிய மனுவுடலில் நித்தியத்தின் இக்கரையில் நாம் வாழும் இறுதி வேளைவரை பாவமற்ற பூரணத்தை நாம் அடை வதில்லை. பரிசுத்தத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், நீதியிலிருந்து நீதிக்கும் வளர்ந்துகொண்டேயிருப் போம் (பிலி 3:12-15).

இயேசுவின் ஊழியத் தொடக்கத்தில் அவர் மேற்கொண்ட 40 நாள் உபவாசத்தையடுத்து அவருக்குப் பிசாசு கொடுத்த மூன்று பிரதிநிதித் துவச் சோதனைகளைச் சுவிசேஷங்கள் வரிசைப் படுத்தியுள்ளன. அதற்குப்பின் பிசாசு அவரை அப் படியே விட்டுவிடவில்லை. தனது இவ்வரிசைச் சோதனைகளை முடித்தபின் அவன் ''கொஞ்சக் காலம்தான்'' இயேசுவை விட்டுப்போய் அடுத்த வாய்ப்பிற்காய்க் காத்திருந்தான் (லூக் 4:13). அவர் இறக்கும்வரை அவரை விட்டானில்லை. இயே சுவோ எந்தச் சமயத்திலும் எந்தக் கட்டத்திலும் அவனுக்கு இடம் கொடுக்கவில்லை. எனவேதான் தமது பூவுலக வாழ்வின் இறுதியில் அவர் கொடுத்த சாட்சி: ''உலகின் அதிபதி வருகிறான்; என்னிடம் அவனுக்கு ஒன்றுமில்லை'' (யோ 14:30). இங்கு இரு படிப்பினைகள் உண்டு. (அ) பிசாசை ஒருபோதும் குறைவாய் மதிப்பிடக் கூடாது. இயேசு வெற்றியாய் உயிர்த்து 50 அல்லது

60 ஆண்டுகளுக்குப் பின்னும் அப்போஸ்தலன் யோவான் எழுதியது: "உலகு முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" (1 யோ 5:19). (ஆ) நாம் சோதிக்கப்பட முடியாத வயதை எட்டுவதேயில்லை. நமது வாழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரை இயேசு பிசாசை எதிர்த்தார். நமது வாழ்வின் மையப்பகுதியிலும் இறுதி ஆண்டுகளிலும் ஏற்படக்கூடிய தளர்வுகளுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசு மன்னித்தபோது, உன்னதமானதொரு சத்தியத்தைப் போதித்தார்: "நானே உலகிற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடக்காமல், ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" (யோ 8:12). ஒளியில் நடப்பதென்றால் இருட்டின் பாவச் செயல்களை வெறுப்பதாம் (எபே 5:8-11). நாம் இயேசுவைப் பின்பற்றினால், அவர் விரும்புவதை விரும்பவேண்டும், அவர் வெறுப்பதை வெறுக்கவேண்டும். இல்லையேல், அவரோடு "ஐக்கியம்" (நெருக்கவுறவு) எங்கே?

இயேசுவின் போதனைகள் எதிர்க்கப்பட்டாலும் ஒருவரும் அவரது வாழ்க்கையில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறர் தம்மில் குறை காண முடியாதபடி வாழ்ந்தார். "உங்களில் எவன் என்னில் பாவம் உண்டென்று சொல்ல முடியும்" என்று தமது வாழ்நாளில் எதிரிகளிடம் சவால் விட்டார் (யோ 8:46). அவரது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவரது தூய்மையைப்பற்றிப் பலரும் சாட்சி பகர்ந்தனர். "இந்த மனிதனில் ஒரு குற்றமும் நான் காணவில்லை" என்று மும்முறை

பிலாத்து கூறினான் (லூக் 23:4,14,22). அவரை ''நீதிமான்'' என்று பிலாத்துவின் மனைவி குறிப்பிட்டாள் (மத் 27:19). ''மரண தண்டனைக் குரிய எதுவும் அவர் செய்யவில்லை'' என்றான் ஏரோது (லூக் 23:15). ''இந்த மனிதன் ஒரு குற்ற மும் செய்யவில்லை'' என்று அவருடன் சிலுவை யிலறையப்பட்ட திருடரில் ஒருவன் கூறினான் (லூக் 23:41). ''இவர் மெய்யாகவே நீதிமான் தான்'' என்று அவரைச் சிலுவையிலறைந்த நூற் றுக்கதிபதி சாட்சியிட்டான் (லூக் 23:47). இதே தரத்தையே இயேசுவைப் பின்பற்றுவோரிடம் இவ்வுலகம் எதிர்பார்க்கிறது. ''அவர் இருக்கிற படியே நாம் இவ்வுலகில் இருக்கிறோம்'' என்று தானே திருமறை சொல்லுகிறது (1 யோ 4:17ஆ)?

கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதால் தேவனது பிள்ளைகள் யாவரும் பரிசுத்த சகோதரரே, பரிசுத்த சகோதரிகளே. வாழ்நாள் முழுவதும் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை நமக்குத் தரப்பட்டுள்ளது. கிறிஸ்து வாழ்ந்த விதத்தைப் பார்த்துக்கொண்டும் படித்துக்கொண்டும் இருப்பதே அக்கடமை (எபி 3:1). இது அவரது உண்மை மற்றும் உத்தமத்தை அடுத்தது (வச 2). அவ்விதமே மனிதர்முன் அவ ருக்கிருந்த தைரியத்தையும் கவனிக்க நாம் அழைக் கப்படுகிறோம். எபி 12:3,4, ''உங்கள் ஆன்மாக் களில் சோர்ந்துபோகாதபடி, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொண்டிருங்கள். பாவத் திற்கு விரோதமாய்ப் போராடுவதில் இரத்தம் சிந்துமளவு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில் லையே!'' எங்கும் பாவக்கறை படிந்துள்ள இவ்

வுலகில் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் வாழ்க்கை முழுவதும் எதிர்நீச்சல்தான் போடவேண்டும். இயேசுவையே பார்த்து அவரையே பின்பற்றி வந்தால்தான் சோர்புற மாட்டோம். இயேசுவிடமிருந்து நாம் கற்பதுதான் பாவ இச்சைகளுக்கு நம்மை விலக்கிக் காக்கும் (எபே 4:20-24).

இயேசுவைப் பின்பற்றுதல் அவரைப்போல் மாறுவதற்காகவே. நமது வாழ்வில் நடக்கத் தேவன் அனுமதிக்கும் எதுவும் இந்த "நல்ல" நோக்கத்திற்காகவே (ரோ 8:28,29). சபையினர் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவின் "நிறைவான வளர்ச்சிக்குக்" கொண்டுவருவதே சபைத் தலைவர் அனைவரின் கடமையாகும் (எபே 4:11-13).

## 4

## முக்கியமானவைகளை வரிசைப்படுத்துவதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

"என்னைப் பின்பற்றி வா" என்று ஒரு நபரை இயேசு அழைத்தார். அவனோ, "*நான் முதலாவது* போய் என் தந்தையை அடக்கம்பண்ணட்டும்" என்றான். இயேசு அவனுக்கு மறுமொழியாக, "இறந்திருப்போர் இறந்திருப்போரைப் புதைக்கட்டும்; நீ போய் இறையரசைப் பிரசங்கி" என்றார் (லூக் 9:59,60). இன்னொருவன், "நான் உம்மைப் பின்பற்றி வருகிறேன்; ஆனால் *முதலாவது* நான் வீட்டிலுள்ளோரிடம் வழியனுப்பிவிட்டு

வருகிறேன்'' என்றான். அவனுக்கு மறுமொழியாக இயேசு, ''கலப்பைமீது கை வைத்துவிட்டுப் பின் திரும்பிப் பார்ப்பவன் இறையரசிற்குத் தகுதியான வன் அல்ல'' என்றார் (லூக் 9:61,62). இவ்விரு சம்பவங்களிலும், ஒன்று அடக்கம்பண்ணுதல், அடுத்தது வழியனுப்புதல். இரண்டும் நியாய மானவைதான். ''தந்தையைப் புதைத்துவிட்டு'' என்று அவன் சொன்னதற்குப் பொருள் தந்தை இறந்துவிட்டார் என்பதல்ல. அவனது தந்தை மர ணப் படுக்கையில் இருந்திருக்கலாம். அப்படியே, வழியனுப்புதல் என்றால் எத்தனையோ சம்பிர தாயங்களை நிறைவேற்ற பல நாட்கள் ஆகலாம். நாம் இயேசுவைப் பின்பற்றவேண்டுமானால் எல் லாச் சூழல்களிலும் இறையரசிற்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதையே இங்கு இயேசு போதிக்கிறார்.

இயேசு தமது வாழ்வில் முக்கியத்துவ வரி சையைச் சரியாய் அமைத்திருந்தார். பண்டிகை கொண்டாடுதல் அல்லது உறவினரோடு மகிழ்ந் திருத்தலைவிடத் திருவசன ஆராய்ச்சி அவருக்கு முக்கியமாயிருந்தது (லூக் 2:46-49). அவரது 40 நாள் உபவாசத்தை அடுத்து அவரது பசியைச் சம் பந்தப்படுத்திப் பிசாசு அவரைச் சோதித்தபோது, ''மனிதன் உணவினால் மட்டுமல்ல, தேவனு டைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த் தையினாலும் உயிர் வாழ்வான்'' என்றார் (மத் 4:4). இதுதான் பக்தன் யோபுவின் அனுபவமாகவும் இருந்தது. அவர் சொன்னது: யோபு 23:12, ''தேவ னது வாயின் வார்த்தைகளை எனக்கு அத்தியாவசி யமான ஆகாரத்தைவிட அதிகமாய்க் காத்துக் கொண்டேன்.'' நமது அனுதினக் கடன்களில் திரு

மறைத் தியானத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? திருவசனத் தியானத்தில் தரமான நேரம் செலவழிக்க முடியாத அளவு எத்தனை நாட்கள் வேலை வேலை என்று ஓடுகிறோம். வாங்கி வைத்த ஆராய்ச்சி வேதாகமங்கள் அலமாரியில் தூங்குகின்றன.

இயேசுவின் வாழ்வில் முன்னுரிமை பெற்றிருந்த இன்னொன்று ஜெபம். மாற்கு 1:35இல் இவ்விதம் வாசிக்கிறோம்: "அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்." காலையின் முதல் மணி நேரங்களை ஜெபத்திற்கென்று ஒதுக்குவதற்கு நிகரில்லை. மனந்திரும்பிய துவக்கக் காலத்தில் நம்மிலிருந்த இந்தப் பரிசுத்தப் பழக்கம் இன்று எங்கு போயிற்று? மனிதரைச் சந்திக்குமுன் மகிபனைச் சந்திப்போம். வேலை அதிகமாவதை ஜெபத்திற்கு இயேசு சாக்குப்போக்காக்கவில்லை. அவரது உபதேசத்தைக் கேட்கவும், அவரால் உடல்நலமடையவும் விரும்பியோர் பெருகிக்கொண்டேயிருக்கையில், அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்" (லூக் 5:15,16). அவரைப் பொருத்தவரை, வேலை கூடினால் ஜெபத்தைக் கூட்டினார். பிரிமானவரே, முழங்காலுக்குத் திரும்புவோம்! ஆன்மீகக் குறைபாடுகள் அத்தனைக்கும் இதுவே நிவாரணம்.

"முதலாவது செய்யவேண்டியது முதலாவதே" (First things first!) என்பதுதான் இயேசுவின் தத்துவம். அவரது போதனையில் இது ஓங்கியிருந்தது. முழு இருதயத்தோடும் முழுப் பலத்

தோடும் தேவனை நேசிப்பதே ''முதலும்'' பிரதானமானதுமான கட்டளை என்றார். பாத்திரத்தின் உட்பகுதியையே ''முதலாவது'' கழுவவேண்டும் என்றார். கடவுளுக்குக் காணிக்கை செலுத்துமுன் தவறிழைக்கப்பட்ட சகோதரனோடு ''முதலாவது'' ஒப்புரவாகவேண்டும் என்று வலியுறுத்தினார். நமது சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க முயற்சிக்குமுன் நமது கண்களிலிருக்கும் உத்திரத்தை ''முதலாவது'' நீக்கவேண்டும் என்றார். எந்த இல்லத்திற்குள் நுழையும்போதும் ''முதலாவது'' அவர்களுக்குச் சமாதானம் கூறச் சொன்னார். சுகமடைந்த தொழுநோயாளியிடம், மோசேயின் பிரமாணத்தின்படி, ''முதலாவது'' அவனை ஆச்சாரியனிடம் போய்க் காட்டச் சொன்னார். நமது உடலுக்கடுத்த தேவைகளைவிட ''முதலாவது'' இறையரசையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடச் சொன்னார். இறுதிக் கால அடையாளங்களைப் பட்டியலிடும்போது, அனைத்து நாடுகளுக்கும் சாட்சியாக ''முதலாவது'' சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும் என்றார். நான் இயேசுவைப் பின்பற்றுபவன் என்றால் எனது வாழ்க்கையின் தத்துவமும் ''முதலாவது செய்ய வேண்டியது முதலாவதே'' என்றே இருக்கவேண்டும்.

1 தீமோ 3:4,5ஐ சுட்டிக்காட்டி, ஆன்மீகக் காரியங்களுக்காய்க் குடும்பத்தைப் பலியாக்கக் கூடாது என்று நாம் பொதுவாய்ச் சொல்வதுண்டு. ஆனால் நான் பலரைப் பார்த்தவரை, குடும்பக் காரியங்களுக்காகவே இறைப்பணி பலியாகிறது. குடும்பத்தைக் கவனியாது விடக்கூடாது என்பதே மேற்குறிப்பிட்ட வசனப்பகுதியில் வலியுறுத்தப்

படுகிறது. பெருங்கூட்ட மக்கள் இயேசுவைச் சுற்றி உட்கார்ந்திருக்கையில், அவரைப் பார்ப்பதற்காய் அவரது தம்பிமாரும் தாயாரும் வெளியே நிற்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு இயேசுவின் பதிலைப் பாருங்கள்: ''என் தாயார் யார்? என் சகோதரர் யார்?'' அவரைச் சுற்றி அமர்ந்திருந்தோரைக் காட்டி, ''இவர்களே எனது தாயாரும் சகோதரருமானவர்கள். இறைச்சித்தம் செய்பவரே எனது சகோதரன், எனது சகோதரி, எனது தாயார்!'' (மாற் 3:31-35). அப்படியானால் இயேசு தமது குடும்பத்தைக் கவனியாது விட்டாரென்று பொருளா? தமது தாயாரைக் கவனிக்க சிலுவையில் தொங்கும்போதும் ஓர் ஒழுங்கு செய்யவில்லையா? அடிப்படை வசதிகள்கூட சில நாடுகளில் இல்லாததால் அங்கெல்லாம் மிஷனரிகளாய்ச் சென்றவர்கள் தங்களது மனைவி, பிள்ளைகளைத் தங்களுடனே கூட்டிச்செல்ல முடியவில்லை. இதைச் சாக்குப்போக்காய்ச் சொல்லித் தங்கள் நாடுகளிலேயே இம்மிஷனரிகள் தங்கியிருந்திருப்பார்களெனில், எத்தனை நாடுகளுக்குச் சுவிசேஷம் எட்டாதிருந்திருக்கும்! குடும்பத்தை விடுதல் எனும் சிலுவையை இம்மிஷனரிகள் சுமந்துகொண்டு இயேசுவைப் ''பின்பற்றினர்'' (மத் 10:37,38).

சரியான வேளையில் சரியான காரியத்தைச் செய்வதே முக்கியத்துவமானவைகளை வரிசைப்படுத்துவதாகும். தேவன் இதை மனதில் வைத்தே செயல்படுகிறார். ''அவர் எல்லாவற்றையும் அதினதின் காலங்களில் நேர்த்தியாய்ச் செய்தார்'' என்று அவரைக் குறித்து வாசிக்கிறோம் (பிர 3:11). இந்நாட்களில் வாழ்க்கையில் எல்லாக் காரியங்களுமே

திய" உடைமைகளை விட்டுவிட ஆயத்தமா யில்லை! இயேசுவைப் "பின்பற்றுதல்" குறித்த உபதேசங்களில் இச்சத்தியம் இந்நாட்களில் இடம் பெறுவதில்லை. சீடத்துவப் பயிற்சித் திட்டங்களிலும் இச்சத்தியம் பாடத்திட்டங்களில் சேர்க்கப் படுவதில்லை. புராட்சிகரமான சீடர் இன்று குறைந்துவிட்டதில் ஆச்சரியமுண்டோ?

மண்ணுலக மகிமையைப் பெறுவதற்கான சோதனையை இயேசு அபாரமாய் மேற்கொண்டார். அவரது 40 நாள் உபவாசத்தைத் தொடர்ந்து, "பிசாசு அவரை உயர்ந்த மலைமீது கொண்டு போய், உலகின் எல்லா நாடுகளையும் ஒரே நிமிடத்தில் அவருக்குக் காட்டி ... நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உமதாகும் என்றான்" (லூக் 4:5-7). "அப்பாலே போ, சாத்தானே" என்று இயேசு அவனைக் கடிந்துகொண்டார் (வச 8). அவரது வாதம் என்னவெனில், தங்கம் அல்ல, தங்கள் மட்டுமே தொழுதுகொள்ளப்படவேண்டும்! நீங்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்பினால், அவருக்கும் உங்களுக்கும் இடையில் இவ்வுலகச் செல்வம் வரக்கூடாது. மாறாக, அவை பின்னாலே தள்ளிவிடப்படவேண்டும். "அப்பாலே" போ, சாத்தானே! இவ்வுலகத்தில் உங்கள் செல்வம் உங்களுக்கு முன்னால் இருக்கிறதா, உங்களுக்குப் பின்னால் இருக்கிறதா?

இயேசுவைப் பின்பற்ற விரும்பும் நாம், நமக்குத் தலைவனாய் இருக்கப்போவது யார் என்று சீக்கிரம் தீர்மானித்துவிடவேண்டும்: பரமனா பணமா? சற்றும் சந்தேகத்திற்கிடமில்லாது இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனிப்போம்: "எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை

செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் பிரியமாயிருப்பார்; அல்லது ஒரு வரைச் சார்ந்துகொண்டு மற்றவரைப் புறக்கணிப் பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணி விடை செய்ய முடியாது'' (மத் 6:24). என்னை ஆளுவது ஆண்டவரா, ஆஸ்தியா? இருவரும் வெவ்வேறான, மாறுபட்ட தலைவர்கள். அவர்கள் உடனாளிகளாய் இருக்க முடியாது. எவரையும்விட அறிவும், செல்வமும் பெருத்த மனிதனின் கூற் றைக் கவனியுங்கள்: ''பொருளாசையானது தன்னை உடையவர்களின் உயிரை வாங்கும்'' (நீதி 1:19). பண ஆசை தற்கொலைக்குச் சமம் (1 தீமோ 6:9,10). இதோ ஒரு தற்பரிசோதனைக் கேள்வி: நான் பணத்தை வைத்திருக்கிறேனா, பணம் என்னை வைத்திருக்கிறதா?

சோற்றுக்காகவும் மீனுக்காகவுமே தம்மைப் பின்பற்றியவர்களை இயேசு கடிந்துகொண்டார் (யோ 6:25-27). பணப் பைத்தியம் குறித்துக் கடுமையாய்ப் பேசினார். ''உங்கள் செல்வம் எங் கேயோ அங்குதான் உங்கள் உள்ளமும் இருக்கும்'' என்றார் (மத் 6:21). தங்கள் செல்வத்தை நம்பி யிருப்போர் விண்ணரசில் நுழைவதைவிட ஊசி யின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்றார் (மாற் 10:24,25). விளைநிலச் சொந்தக்காரன் ஒருவனை ''அறிவிலியே'' என்றழைத்து, அவனி டம், ''இன்றிரவே உன் உயிர் போகும்; நீ சேர்த் தவை யாருடையவையாகும்?'' என்று கேட்டார் (லூக் 12:20). செல்வத்தின் ''மயக்கம்'' செடியை நெருக்கிப்போட்டு அதைக் கனி கொடுக்க விடாது என்றார் (மத் 13:22). ஓர் ஆட்டின் தொண் டையை ஓர் ஓநாய் கடித்துக் குதறுவதே இங்கு சித்திரம்! பயங்கரம்!

கொடுத்தல் என்று வரும்போது, நாம் கொடுப்பது எவ்வளவு என்பதல்ல, வைத்துக்கொள்வது எவ்வளவு என்பதே தேவனது கணக்கீடு. தேவாலயத்தின் காணிக்கைப் பெட்டிக்கருகில் ஒரு நாள் இயேசு உட்கார்ந்திருந்து மக்கள் ''எப்படிக்'' காணிக்கை போடுகிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார். ஓர் ஏழை விதவை இரண்டே காசுகள் போட்டாள். தம்மைப் பின்பற்றும் சீடரிடம் இயேசு சொன்னதைக் கவனிப்போம்: ''காணிக்கை போட்ட எல்லாரையும்விட இந்த ஏழை விதவை அதிகம் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் நிறைவிலிருந்து போட்டார்கள்; இவளோ தனது வறுமையிலிருந்து பிழைப்புக்கு வைத்திருந்த எல்லாவற்றையும் போட்டுவிட்டாள்'' (மாற் 12:41-44). தசமபாகம் என்பது துவக்க நிலையிலுள்ளவர்களுக்கான பழைய ஏற்பாட்டு உபதேசம். கிறிஸ்தவ வாழ்வில் நாம் வளரும்போது, நாம் கொடுப்பதின் ''விகிதம்'' கூட வேண்டும். அதுதான் இயேசுவைப் பின்பற்றுவோரின் உண்மையான அடையாளம். நம்மில் பெரும்பாலானோர் இன்னும் தசமபாகம் எனும் குழந்தைப் பருவத்தை விட்டு வெளிவராததாலேயே திருப்பணி எங்கும் வெகுவாய்ப் பாதிக்கப்படுகிறது. வாழ்க்கையில் சில காரியங்கள் இல்லாமலும் நாம் வாழக் கற்றுக்கொள்ளாவிடில் இல்லாதோரை நாம் ஆசீர்வதிக்க முடியாது. இயேசு பெரும்பாலும் எளியோரோடேயே தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார். அவரது மேசியாப் பணியின் அறிக்கையிலேயே அவர் குறிப்பிட்டது: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மீது இருக்

கிறார்; தரித்திரர்க்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர் என்னை அபிஷேகம்பண்ணினார்'' (லூக் 4:18). தமது மேசியாப் பணிக்கு நிரூபணமாக இதையே குறிப்பிட்டார்: ''தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது'' (லூக் 7:22). தங்களது ஆண்டவரின் மனப்பான்மையை பற்றிக்கொண்ட அப்போஸ்தலர், ''தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்'' என்று விசுவாசிகளுக்கு அறிவுறுத்தினர் (ரோ 12:16). நாம் பல விருந்துகள் நடத்துகிறோம்; ஆனால் எளியோருக்கு விருந்து நடத்த இயேசு கொடுத்த அறிவுரையை நம்மில் எத்தனை பேர் நடைமுறைப்படுத்துகிறோம்? (லூக் 14:12-14). இயேசுவின் இவ்விதப் புரட்சிகரப் போதனைகளை நாம் பின்பற்றாவிடில் சமுதாயத்தில் பெரிய அளவில் தாக்கம் எதுவும் ஏற்படுத்த முடியாது. நசுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், தீண்டப்படாதோர் போன்றோரை நண்பராக்குங்கள்.

1945க்குப் பின்னர் இதுவரையில்லாத நெருக்கடியை மனுக்குலம் இன்று சந்தித்து வருகிறது. 200 இலட்சத்திற்குக் கூடுதலானோர் பசிப்பிணியால் மரணம் நோக்கியிருக்கின்றனர். 2017 மார்ச் 15 அன்றோடு இந்தியாவில் தங்களது தானதர்மப் பணிகளை நிறுத்தும்படி Compassion International என்ற நிறுவனத்திற்கு இந்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஏறத்தாழ 1,45,000 சிறுவர், சிறுமியரை இந்நிறுவனம் இந்தியாவில் ஆதரித்துவந்தது. இதற்காய்ப் புலம்பிக்கொண்டும், அரசைக் குறைகூறிக்கொண்டும் இருப்பதைவிட, அந்தந்த மாநிலங்கள், மாவட்டங்களிலுள்ள திருச்சபைகள் அங்கங்குள்ள இச்சிறுவர் சிறுமியரைத்

தாங்கும் பொறுப்பினை எடுத்துக்கொள்ள இந்தத் தேவையான பணம் இந்தியத் திருச்சபையில் இல்லையோ? கவலை, காலத்தான் நாம் கை நீட்ட வாங்கிக்கொண்டேயிருப்போமா? வியாக்கனை செலுத்தத் திருச்சபையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு பிள்ளையைப் பொறுப்பெடுக்கும்படிச் சபையாரைத் தூண்டிவிடும் ஆயர்களையும் போதகர்களையும் அன்புடன் அழைக்கிறேன். (விபரங்களுக்கு www.[illegible] [illegible] இணையதளத்திற்குச் செல்லுங்கள்.)

திருச்சபையையும் திருப்பணியையும் பண [illegible]யானது புழுவைப்போல அரித்துவிடும். பவுல் போன்ற உத்தம ஊழியர் இருந்தால் தேமா போன்றோர் தங்களுடைய புகழால் ஓடிவிடுவர் (2 தீமோ 4:10). சுகபோக வாழ்வு உபதேசம் திருச்சபையில் தோன்றியுள்ள புற்றுநோய். பொருளாதாரச் சிந்தனையை மேம்படுத்தும் பிரசங்கிமாரை "கிறிஸ்துவுக்கு" அல்ல, "கிறிஸ்துவின் சிலுவைக்கு" எதிரிகள் என்று பவுல் அழைத்தார் (பிலி 3:18-20). இயேசுவின் உண்மைச் சீடர்களும் சுகபோக வாழ்வு உபதேசத்தைத் தழுவ முடியாது. இவ்வுபதேச பிரசங்கிமாரைப் பொறுத்தவரை, அப்போஸ்தலரெல்லாரும் தோல்வியடைந்தோர்களே! (1 கொரி 4:11-13).

*இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்,*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*

*சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே,*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*

**6**

## வசதிகளைத் தியாகம்பண்ணுவதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

தம்மைப் ''பின்பற்றி'' வரும்படி இயேசு யாருக்கும் நயங்காட்டவில்லை. ''நீர் எங்குச் சென்றாலும் நான் உம்மைப் பின்பற்றி வருவேன்'' என்றான் ஒரு மறைநூல் அறிஞன் (மத் 8:19). இயேசுவின் போதக ஊழியம் அவனை வெகுவாய்க் கவர்ந்திருக்கவேண்டும். அவனுக்கு இயேசு தந்த பதிலைப் பாருங்கள்: ''நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை'' (வச 20). உணர்ச்சிவசப்பட்டு, ஆசாபாசத்தினால் எவரும் தம்மைப் பின்பற்றிவர இயேசு விரும்பவில்லை. அவரைப் பின்பற்ற வேண்டுமானால் செலுத்தவேண்டிய கிரயத்தைக் கணக்கிடும்படித் தன்னார்வலர்களை அறிவுறுத்தினார். சீடத்துவ அல்லது தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களில் தன்னல மறுப்பை நாம் உபதேசிக்கிறோமா? செயல்முறைகளையும் நுணுக்கங்களையும் சொல்லிக்கொடுப்பதில்தான் நேரம் செலவழிக்கிறோம். நாம் அதிகம் சாதிக்காதது இதனாலன்றோ?

தன்னல மறுப்பிற்கு இணையற்ற மாதிரியானவர் இயேசுவே. தமது பரலோக ஆனந்தத்தைத் துறந்து பாடுகள் நிறைந்தவரானார். விண்ணகத் தோழமைகளை விட்டுப் பாவிகளின் நண்பரானார். நித்திய மகிமையைக் களைந்து தள்ளப்பட்ட கல்

லானார். விண்ணில் தூதர் சேனையின் பணி விடை பெற்றுக்கொண்டிருந்தவர் வேலைக்கார னும் அடிமையுமானார். தூதரால் எப்பொழுதும் போற்றப்பட்டுக்கொண்டிருந்தவர் பகடிக்குப் பலி யானார். தமது பூரண அழகை இழந்து நமக்காய்ப் பாவமானார். சிங்காசனத்தை விட்டிறங்கிப் பலி பீடத்தில் தாமாகப் பலியானார். இயேசுவைப் பின் பற்றும் ஒவ்வொருவரிடமும் இவ்வித மனப் பான்மையே காணப்படவேண்டும்.

இயேசுவைப் "பின்பற்ற" விரும்பும் எவருக் கும் அடிப்படை நிபந்தனை தன்னல மறுப்பே. இது நான்கு சுவிசேஷங்களிலும் போதிக்கப்பட் டுள்ளது. மத் 10:38; 16:24; மாற் 8:34; லூக் 9:23; 14:27; யோ 12:25. ஆனாலும் இது பிர சங்கிக்கப்படுவது இன்று அபூர்வம். ஏனோ? இக்கருத்தின்மீது சமீபத்தில் ஏதாவது பிரசங்கம் கேட்டது உங்களுக்கு நினைவிருக்கிறதா? சோகை பிடித்த கிறிஸ்தோரால் கிறிஸ்தவம் நிறைந்திருப்பதில் ஆச்சரியமில்லையே! இனி வரும் காலம் குறுகினதால், நியாயமான அனு போகங்களில்கூட அளவுக்குமீறிய ஈடுபாடு கூடாதென விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர் அன்றே போதித்தனர் (1 கொரி 7:29-31). தங் களையே தன்னல மறுப்பிற்கு முன்மாதிரிகளாய் அப்போஸ்தலர் நிறுத்தினர். எடுத்துக்காட்டாய் 1 கொரிந்தியர் 9:3-ஐப் பாருங்கள். உணவு, குடும்பம், பணம் (food, family & finance) ஆகிய மூன்றை அவர்கள் முக்கியமாகக் குறிப்பிடுகின் றனர். "எங்களுக்கு உரிமையில்லையா" என்று இப்பகுதியில் மும்முறை அப்போஸ்தலன் பவுல் கேள்வி எழுப்புகிறார்.

. அரண்மனைக்கு மோசேயை எடுத்துச்சென்றது தேவனே எனினும், எபிரெயர் 11:25இல் இப்படி வாசிக்கிறோம்: ''விசுவாசத்தினாலே மோசே அவன் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவச் சிற்றின்பங்களை அனுபவிப்பதைவிட இறைமக்களோடு துன்பம் அனுபவிப்பதையே தெரிந்துகொண்டான்.'' ஆசீர்வாதங்களைப் ''பெற்றுக்கொள்ள'' மக்களை ஊக்குவிக்கத்தான் பிரசங்கிமார் எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தைப் பயன்படுத்துகிறார்களே தவிர ஆசிகளை ''விட்டுவிட'' அதில் இருக்கும் போதனைகளைக் கண்டுகொள்வதில்லை. சுகபோக வாழ்வு உபதேசம் இங்குதான் சமநிலை தடுமாறுகிறது. விசுவாச வீரருக்கு இவ்வுலகம் தகுதியாய்த் தெரியவில்லை. அவர்கள் கூடாரங்களுக்காய்க் கோபுரங்களை விட்டனர் (எபி 11:38).

இறுதிக்காலத்தின் கொடிய நாட்களின் முதல் இரண்டு அடையாளங்கள் மனிதர் ''தற்பிரியராயும்'' ''தனப்பிரியராயும்'' இருப்பர் என்பதே (2 தீமோ 3:1,2). நாம் இப்படிப்பட்டவர்களை விட்டு விலகவேண்டுமாம் (வச 5). எவ்வளவு கண்டிப்பு பாருங்கள்! சபையை விட்டு விலக்குவதுதான் நமக்குத் தெரியும்; ஆனால் விலகுவது நமக்குத் தெரியுமா? ஒரு தொழுநோயாளியைத் தொடத் தயங்குவதுபோல் தற்பிரியத்திற்கும் தனப்பிரியத்திற்கும் விலகியோட வேண்டும். வாசக நண்பரே, சமீபத்தில் உங்கள் வாழ்வில் எந்த நன்மையை விட்டிருக்கிறீர்கள்? செல்வம் கொழித்த உல்லாச வாழ்வு முறையில் உங்களுக்கிருக்கும் பிடிப்பைத் தளர்த்த ஓர் இக்கட்டு உங்களுக்கு நிகழும்வரை

[illegible]

7

## நான் விரும்புவதைச் செய்ய முடியாதபோது இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

கல்வாரியில் இயேசு உயிர்த்த பின்னர் தமது சீடர்களுக்குக் காட்சியளித்த சம்பவங்கள் ஒன்றில் அவர் சீமோன் பேதுருவுடன் முக்கியமானதொரு உரையாடல் மேற்கொண்டார். அவர் பேதுருவிடம் சொன்னது: "நீ இளைஞனாயிருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடி வந்தாய். உனக்கு முதிர் வயதாகும்போது நீ கைகளை விரித்துக்கொடுப்பாய்; வேறொருவன் உன்னைக் கட்டி நீ விரும்பாத இடத்திற்குக் கூட்டிச் செல்வான் என உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா 21:18). இதைக் கேட்டவுடன் பேதுருவுக்குத் தனது உடன் சீடனைக் குறித்து அறிய ஆவலுண்டாயிற்று. ஆனால் பேதுருவுக்கு இயேசு கொடுத்த பதில்: "நான் வருமளவும் இவன் இருக்கவேண்டுமென்று நான் விரும்பினால் உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றி வா" (வச 22).

நான் விரும்பாததை நான் செய்யவேண்டு மென்ற சூழலிலும் இயேசுவைப் பின்பற்றுவது கடினம்தான். இங்கும் இயேசுவே நமக்கு மாதிரி யானவர். கெத்செமனேயில் அவரது அனுபவத் தைப் பாருங்கள். அவரது துக்கம் அளவுக்கு மீறி யது (மத் 26:38). இந்தத் துன்பக் கிண்ணம் தம்மிடமிருந்து போய்விடவேண்டுமென்று அவர் விரும்பினார். அவர் ஜெபித்தது: ''என் பிதாவே, கூடுமானால் இக்கிண்ணம் என்னை விட்டுக் கடந்துபோகட்டும்; ஆனாலும், என் விருப்பப்படி யல்ல, நீர் விரும்புகிறபடியே ஆகட்டும்'' (வச 39). இரண்டாம் தடவை சற்று வித்தியாசமான வார்த் தைகள் சொல்லி ஜெபித்தார்: ''என் பிதாவே, நான் பருகினால் தவிர இக்கிண்ணம் என்னை விட்டு நீங்காதென்றால், உம் சித்தமே ஆகட்டும்'' (வச 42). சொல்லொண்ணாத் துக்கம் இருந்தும் தமது விருப்பத்தை விட்டுப் பிதாவின் சித்தம் நோக் கியே நகர்ந்தார். மூன்றாம் ஜெபத்தில் அர்ப்பண மும் சமர்ப்பணமும்தான் இருந்தன. அதைத் தொடர்ந்து தேவ தூதன் ஒருவன் வானிலிருந்து தோன்றி அவரைப் பலப்படுத்தினான் (லூக் 22:43). வேதனையிலிருந்து இயேசு விடுவிக்கப் படவில்லை; அதைத் தாங்கிக்கொள்ளப் பலப் படுத்தப்பட்டார் (வச 44). நமது விருப்பத்திற்கு மாறாக இறைச்சித்தத்திற்கு அர்ப்பணிப்பது விண்ணிலிருந்து நமக்கு உன்னத பலத்தைக் கொண்டுவரும்! இங்கு மும்முறை இயேசு ஜெபித்தபோதும், பிதாவாகிய தேவனைப் பாச மாக ''என் பிதாவே'' என்றழைப்பதைக் கவனியுங் கள். தமது பிரதான ஆச்சாரிய ஜெபத்தில்கூட அவர் பிதாவை இவ்விதம் அழைக்கவில்லை!

நொறுக்கப்படும்போதுதான் நமக்குத் தேவனோடுள்ள நெருக்கவுறவு தெளிவாகும். அர்ப்பணிப்பை அடுத்துதான் பலத்தின்மேல் பலமடைவோம். இயேசுவைப் பின்பற்றுவது எவ்வளவு பயபக்தியான அனுபவம்!

நமது விருப்பங்களுக்கும் தேவனது சித்தத்திற்கும் மோதல்கள் நமது வாழ்வில் சாதாரணம். உண்மையென்னவெனில், இறைச்சித்தம் அறியவே நாம் பயப்படுகிறோம்! அவரது சித்தத்தை ''அறிய'' ஆவல் கொண்டாலும், அதின்படிச் ''செய்ய'' ஆர்வமில்லை. இதனால்தான் தேவ சித்தம் நமக்குப் புலப்படுவதில்லை (யோ 7:17). கீழ்ப்படிதல் மூலமாகவே அறிவு வருகிறது. சங்கீதம் 111:10, ''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவரது கட்டளைகளின்படிச் செய்கிற யாவருக்கும் நல்ல புத்தி உண்டு.'' இங்குதான் நமது ஆதிப் பெற்றோர் தவறினர். கீழ்ப்படிதலைவிட அறிவை நாடினர். கீழ்ப்படியும் மனப்பான்மைதான் இயேசுவைப் பின்பற்றுவதை இன்பமாக்கும்.

*கர்த்தரோடின்பமாய், அன்னியோனியமாய்*
*நீங்காமலே வாசம் செய்வோம்;*
*அவர் சொற்படியே உண்மையோடுடனே*
*மனோற்சாகமாய்க் கீழ்ப்படிவோம்!*

படிப்பு உதவியாகத்தானிருக்கும். அனுபவம் கைகொடுக்கத்தான் செய்யும். தீர்மானமெடுப்பதில் நன்மை தீமை அலசல் ஆரோக்கியம்தான். இவையெல்லாவற்றிற்கும் மேலாக நாம் கீழ்ப்படியவேண்டிய தேவ ஆலோசனை: நீதி 3:5,6,

''முழு மனதோடு ஆண்டவரை நம்பு; உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது உன் பாதைகளைச் செம்மையாக்குவார்.'' தர்க்கரீதியாகவே இயங்கும் இந்த யுகத்தில் இது கடினம்தான். ஆனாலும், துவக்கம் முதல் முடிவை அறிந்தவர் தேவன் மட்டுமே என்ற அறிவு அவரது நடத்துதலே சாலச் சிறந்தது என்ற நிச்சயம் தரும் (ஏசா 46:10). ஓர் ஆட்டிடையன் போல அவர் நம்மை நடத்துவார்! ''சாட்டை'' (whip) இருந்தால்தான் குதிரைகளும் கழுதைகளும் கீழ்ப்படியும்; நமக்கோ ஒரு ''சாடை'' (wink) போதும்! ''என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்வேன்'' என்பது திருவாக்கு (சங் 32:8.9). குதிரைக்கும் கழுதைக்கும் ''வார்'' வேண்டும்; நமக்கோ தேவனது ''வார்த்தை'' போதும்! சாட்டையினாலும் சாடையினாலும் வழிநடத்தப்பட்ட இருவரது எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம்: யோனாவுக்குச் சாட்டை, தாவீதுக்குச் சாடை!

யோனா விரும்பிய வழியில் அவரை விட்டுவிட முடியாத அளவு தேவன் அவரை நேசித்தார். மூன்று நாட்கள் ஒரு மீன் வயிற்றுக்குள் தேவன் அவரை அடைத்தார். யோசித்துப் பாருங்கள்! அப்பெரிய மீனின் குடல் அசைவுகள் யோனாவுக்கு எப்படியிருந்திருக்கும்! ஆனால் மீன் வயிற்றில் மூன்று நாட்கள் என்பது வேதக் கலாசாலை வளாகத்தில் மூன்று ஆண்டுகள் என்பதிலும் மேல்! மீன் வயிற்றுக்குள்ளிருந்து அவர் ஜெபத்தைப்பற்றி எவ்வளவு கற்றார் என்பதை இரண்டாம் அத்தியாயத்தை வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். ''இரட்சிப்பு கர்த்தருடையது'' எனும் அதி

வுன்னத இறையியல் அறிவு அவருக்குக் கிடைத்ததும் பட்டம் பெற்று வெளியே வந்தார்! (யோனா 2:9).

தேவாலயம் கட்டுவதற்கான அனைத்துப் பொருட்களையும் தாவீது சேகரித்தார். ''உன் இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்; கர்த்தர் உன்னோடிருக்கிறார்'' என்று தாவீதிடம் தீர்க்கன் நாத்தான் சாதாரணமாய்ச் சொல்லிவிட்டார் (2 சாமு 7:3). ஆனால், ஆலயம் கட்டப்போவது தாவீது அல்ல, சாலொமோன்தான் என்று அன்றிரவு தீர்க்கதரிசிக்குத் தேவன் தமது பரிபூரணச் சித்தத்தை வெளிப்படுத்தினார் (வச 12-14). இதனால் தேவனிடம் தாவீது ஏமாற்றமடைய வில்லை. திருமறை சொல்வதைப் பாருங்கள்: ''தேவனாகிய கர்த்தாவே, என்னை இவ்வளவு தூரம் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம், என் குடும்பம் எம்மாத்திரம்'' என்று தேவனுக்கு முன்பாக ''உட்கார்ந்து'' தாவீது தன்னைத் தாழ்த் திக் கூறினார் (வச 18). ''இதெப்படி ஆண்டவரே? நான்தானே ஆலயம் கட்ட இவ்வளவு சேகரித் தேன்? எனது திட்டத்தின்படிச் செய்யும்படித் தீர்க்கதரிசிதானே சொன்னார்? நீர் என்னோடு இருக் கிறீர் என்றும் உறுதியளித்தாரே?''— இப்படி யெல்லாம் தாவீது தேவனிடம் வாதாடவில்லை.

கிறிஸ்துவின் பேராணைக்குக் கீழ்ப்படிந்து அப்போஸ்தலர் கிரமமாக இடம் விட்டு இடம் நகர்ந்துகொண்டிருந்தனர். தேவை மிகுந்த ஆசி யாக் கண்டத்திற்குச் செல்ல முயன்றபோதோ அங்கே பிரசங்கம்பண்ணாதபடிப் பரிசுத்த ஆவியானவரால் ''தடைபண்ணப்பட்டனர்'' (அப்

16:6). எனவே பித்தினியாவுக்குச் செல்ல விழைந்தபோது அங்கும் ஆவியானவர் அவர்களைப் ''போகவிடவில்லை.'' இறுதியாக மக்கெதோனியா போய்ச் சேர்ந்த அவர்களுக்கு ஐரோப்பாவில் முதற் கனியாக லீதியாள் கிடைத்தாள் (வச 7-15). வளைந்துகொடுப்போர் பாக்கியவான்கள்; அவர்கள் ஒடிந்துபோகமாட்டார்! நாம் முழு மனதுடன் இயேசுவைப் பின்பற்றினால் நமது ஏமாற்றங்கள் தேவன் நமக்கருளும் ஏற்றங்களாய் மாறும்!

''வேண்டாம்'' என்று தேவன் சொல்வாரானால் நமது முதிர்ச்சிக்காகவே அவர் நம்மைக் காத்திருக்கச் செய்கிறாரென்று பொருள். ஆகாரின் சரித்திரம் இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு. சாராளின் இம்சை தாங்க முடியாது ஆபிரகாமின் வீட்டை விட்டு ஆகார் வெளியேறியது சரிதானே, நியாயம்தானே? (ஆதி 16:6). தேவனோ அவளைத் தடுத்து நிறுத்தி, சாராளின் கீழ் அடங்கியிருக்கும்படித் திருப்பியனுப்பினார் (வச 9). சில காலம் கழித்து, ஆகாரை அனுப்பிவிடும்படி தேவனே ஆபிரகாமிடம் கூறினார் (21:10-12). இவ்விதம் கண்ணீர்களின் பள்ளத்தாக்கில் நடந்து சென்ற காலத்தில்தான் ''நீர் என்னைக் காண்கிற தேவன்'' என்ற மகத்தான வெளிப்பாடு ஆகாருக்குக் கிடைத்தது! (16:13). தேவனிடமிருந்து அவள் வல்லமையான வாக்குகளையும் பெற்றுக் கொண்டாள் (16:11,12; 21:18).

இயேசுவின் இதயம் சாந்தமும் மென்மையுமானது (மத் 11:29). நாம் அவரைப் பின்பற்றும்போது, நமது எதிர்காலத்தைக் குறித்துப் பெருமிதமும் அகங்காரமும் நம்மிடம் காணப்படாது

(யாக் 4:13-17). எந்தவொரு வேலையையும் திட்டத்தையும் மேற்கொள்ளுமுன், "கர்த்தருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் ..." என்று தாழ்மையாய்ப் பேசுவோம். நமது முரட்டுக் குணத்தினால், திறந்த வாசல்களைவிட அடைபட்ட கதவுகள் மூலமாகவே தேவன் நம்மை நடத்துகிறார். பாடலாசிரியர் இக்கருத்தை எவ்வளவு அழகாய் எடுத்துரைக்கிறார் பாருங்கள் —

*கார் மேகம் மேலே மூடும் பள்ளமென்கிலும்,*
*காற்ற கோரமாக மோதும் ஸ்தானத்திலும்,*
*இயேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்;*
*இரட்சகர் கைத்தாங்கத் தைரியம் கொள்ளுவேன்.*

*பின்செல்வேனே! மீட்பர் பின்செல்வேனே!*
*எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்;*
*பின்செல்வேனே! மீட்பர் பின்செல்வேனே!*
*இயேசு காட்டும் பாதை எல்லாம் செல்லுவேன்!*

## 8

## அன்புகூருவதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

இயேசு தமது சீடரை நேசித்ததுபோல அவர்களும் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்று இரு சந்தர்ப்பங்களில் இயேசு கூறினார். யோவான் 13:34,35, "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் ... அதினால் நீங்களெல்லாரும் எனது சீடர் (என்னைப் பின்பற்றுபவர்) என்று

எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.'' நம்மை இயேசு நேசிப்பதுபோல் நாமும் பிறரை நேசிப்பதே நமது அடையாள அட்டை! அடுத்த வசனப்பகுதி: யோவான் 15:9,12, ''பிதா என்னில் அன்புகூர்ந்ததுபோல் நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன் ... **நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல்** நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்பதே எனது கட்டளை.'' இது தொடர் சங்கிலி போன்றது. இயேசுவைப் பிதா நேசித்ததுபோல் இயேசு நம்மை நேசித்தார். இயேசு நம்மை நேசித்ததுபோல நாம் பிறரை நேசிக்கவேண்டும். பிதா வானவரைக் குமாரனானவர் பிரதிபலிக்கிறார்; குமாரனானவரை நாம் பிரதிபலிக்கவேண்டும்.

எபேசியர் 5:1,2இல் அப்போஸ்தலன் பவுல் இதே காரணத்தை முன்வைக்கிறார்: ''பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள். கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்தது போல் நீங்களும் அன்பில் நடந்துகொள்ளுங்கள்.'' ''தேவனைப் **பின்பற்றுங்கள்''** என்ற அரிய கூற்றுள்ள புதிய ஏற்பாட்டுப் பகுதி இது. இதன் சூழமைவு அன்பைப் பற்றியதே.

பாதம் கழுவுதல் மூலம் இயேசு தமது சீடர் மீதுள்ள அன்பைச் செயல்முறையில் காட்டினார். இச்செயலை வேலைக்காரர்கூடச் செய்யார்; அடிமைகள் மட்டுமே செய்வர். சீடர்களது பாதங்களைக் கழுவிய பின்னர், இயேசு கீழே உட்கார்ந்து அதின் பொருளை விளக்கினார்: யோவான் 13:12-15, ''உங்கள் ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவியிருக்கும் போது, நீங்களும் ஒருவர் கால்களை ஒருவர் கழுவ

வேண்டும். நான் செய்ததுபோல் நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்." சில சபைகளில் திருவிருந்துக்கு முன்னர் பாதம் கழுவுதல் இருந்தாலும் அது ஒரு சடங்காகவே மாறிவிட்டது. நமது பாதங்கள்தான் நமது உடலின் அடிமட்டப் பகுதி. ஒருவருக்கொருவர் நமது அன்பைக் காட்ட எந்த அளவு நாம் இறங்கிப் போகவேண்டுமென்பதை இது காட்டுகிறது. சாந்தம், மென்மை, தாழ்மை ஆகியவற்றை உள்ளடக்கிய மனப்பான்மையின்றி இது சாத்தியமல்ல. இதைத்தான் தம்மிடமிருந்து நாம் "கற்றுக்கொள்ள" நம்மை இயேசு அழைக்கிறார் (மத் 11: 28-30)! தாழ்மையுள்ள மனதுடன் நாம் மக்களை நேசிக்கும்போதுதான் அவர்களது மனதிலுள்ள வேதனைகளையும் பாரங்களையும் இறக்க முடியும்.

மக்களைத் தட்டித் தகர்க்க அல்ல, கட்டி எழுப்பவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். மக்களை உருக்குலைக்க அல்ல, உற்சாகப்படுத்தவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது தலைவராம் இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசன விளக்கம் இதுவே: ஏசாயா 42:1-4, "இதோ, நான் ஆதரிக்கும் என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே ... அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரியும் திரியை அணையாமலும் இருப்பார்." தம்மைப் பிரபலப்படுத்தக்கூடாதென்று மக்களை இயேசு எச்சரித்தபோது, இவ்வசனப்பகுதியை மேற்கோள் காட்டினார் (மத் 12:15-21). என்னே படிப்பினை! மக்களைக் கட்டியெழுப்புவது ஓர் அமைதியான பணி. தன்னையே முன்னிறுத்தியோ முன்னேற்

றவோ இங்கு இடமில்லை. மறைவில் பார்க்கிற தேவன் வெளிப்படையாய் நமக்குப் பலன் தருவார். இவ்வித முயற்சிகள் உடனடி விளைவுகள் தராதிருக்கலாம். ''நெரிந்தோரையும் மங்கியிருப்போரையும்'' ஆசீர்வதிக்கப் பொறுமை தேவை. ''ஜெயம்'' கிடைக்கும்வரை நம்மில் இயேசு செயல்படுகிறார் (வச 20). இவ்வித நபரை யார் தான் ''நம்ப'' மாட்டார் (வச 21)?

தேவனைப் பின்பற்றும் நாம்தான் அன்பை முந்திக் காட்டவேண்டும். ''நாம் பாவிகளாயிருக்கும்போதே கிறிஸ்து நமக்காய் உயிர் கொடுத்ததால், தேவன் நம்மீது வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்'' அல்லவா (ரோ 5:8)? ''அவர் முந்தி நம்மிடம் அன்புகூர்ந்ததால் அல்லவோ நாம் அவரிடம் அன்புகூருகிறோம்'' (1 யோ 4:19)? ஒரு நபர் எப்படிப்பட்டவர் மற்றும் அவரால் நமக்கு என்ன கிடைக்கும் என்ற அடிப்படையில் ஒருவரை நேசிப்பது மானிடம். ஆனால் ஒருவர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும், அவர் என்ன செய்தாலும், அவரை நேசிப்பது தெய்வீகம். நாம் ''பாவிகளாய் இருக்கும்போதே'' கிறிஸ்து நமக்காய் உயிர் கொடுத்தார்! தமது சீடர் திரும்பத் திரும்பத் தவறினாலும், அவருக்கு ஏமாற்றம் தந்தாலும், இயேசு தமது சீடரிடம் அன்பாயிருந்தார். ''இவ்வுலகில் தம்முடையவர்களிடம் அன்பு வைத்தபடியே, முடிவுவரை அவர்களிடம் அன்பு வைத்தார்'' என்று அவரைக் குறித்து வாசிக்கிறோம் (யோ 13:1).

பரம பிதாவானவரை இயேசு இவ்வுலகிற்குக் காட்டினார். அவர் பிலிப்புவிடம், ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க,

[illegible]

[illegible]

தலைவன் (leader) என்பவன் எப்பொழுதும் ஓர் ஏணியாக (ladder) திகழவேண்டுமென்று நெடு கவே விசுவாசித்து அப்படியே போதித்தும் வந்தி ருக்கிறேன். மக்களை மேலே கொண்டுவர அவன் முடிந்த அத்தனையையும் செய்யவேண்டும். ஆனால் என்னை ஓர் ஏணியாகப் பயன்படுத்தி மேலே வந்த பலர் மாடிக்குச் சென்றவுடன் ஏணி யை உதைத்துத் தள்ளிவிட்டனர் என்பது எனக்கு ஏமாற்றம்தான். அடுத்து ஏறி வரவேண்டியவர் களையும் மறந்துவிட்டனர். இவ்வித அனுபவத் தின் வழியே கடந்துபோனவர்களுக்குத்தான் இந்த வேதனை புரியும். ஆனால் நான் கசப்புணர்வு கொள்வது சரியா? இயேசுவின் அனுபவம் என்ன? அவரது பயனாளிகளில் 10 சதவீதத்தினரே நன்றியுடனிருந்தனர் (லூக் 17:17). இயேசுவைப் பின்பற்றும் நான் இதைவிட அதிகமாய் எதிர் பார்ப்பது நியாயமா? இயேசுவைப் பின்பற்றிய பவுலடியார் இவ்வித அனுபவங்களை மிக நேர்த்தி யாய்க் கையாண்டார். மக்களைக் கட்டியெழுப்பி மேலே கொண்டுவரத் தனது ஊழியத்தில் தன்னையே தாரை வார்த்தார் (பிலி 2:17). ஆனால் அதற்குப் பிரதிபலன் போதுமான அளவு இல்லை. கொரிந்து நகர் விசுவாசிகளுக்கு அவர் எழுதியது ஒரு சான்று: ''நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்க ளால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் மகிழ்வு டன் நான் உங்கள் ஆன்மாக்களுக்காய்ச் செலவு பண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்பு கிறேன்'' (2 கொரி 12:15). பவுலடியாருக்குமுன் நான் வெட்கமடைகிறேன்.

அன்பின் ஆவியை இனவெறி கொன்று விடும். நமது வாழ்வில் சிலுவையின் செயல்பாட்டி

[illegible] குறித்த பெருமையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். யூதர் மற்றும் யூதரல்லாதோர் என்ற முற்றும் வேறுபட்டன இரு குழுவினரை ஒன்று சேர்க்க முடியுமானால், எந்த இரு இனத்தவர் களிடையிலும் அன்புறவும் ஒற்றுமைப்பாடும் இருக்க முடியாது (எபே 2:13,14)? யூதரல்லா தோரை யூதர் நாய் கூட்ட "மக்கள்" என்றுகூட மதிக்கவில்லை (உபா [illegible]; மாற் [illegible]). இயே சுவோ வேண்டுமென்றே யூதரல்லாதோரைப் பாராட்டினார். இஸ்ரயேலிலும் இவ்வித விசுவா சத்தைக் காணவில்லை என்று நூற்றுவர்தலைவரின் விசுவாசத்தைப் பாராட்டினார். அந்தச் சமாரியப் பெண்ணிடம் பொறுமையாக நேரம் செலவழித்து அவளது கிராமத்தில் ஒரு பெரிய அறுவடை கண் டார். குற்றுயிராய்க் கிடந்தவனுக்கு உதவியது யூதரான ஆசாரியனோ லேவியனோ அல்ல, சமாரியனே. சுகமடைந்த பத்து தொழுநோயாளி களில் நன்றி செலுத்தத் திரும்பி வந்தவன் யூதனல்ல. இஸ்ரயேலரல்லாத விதவைகளிடமே [illegible] எலியாவும் எலிசாவும் உதவிபுரிய அனுப்பப்பட்டனர். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

"சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்" என்றார் இயேசு. ஒருவரையொருவர் எதிர்களாயிருந்த பிலாத்துவுக்கும் ஏரோதுக்கும் இடையில் இயேசு சமாதான காரணரானார் (லூக் 23:12). சிலுவை யிலிருந்து வந்த முதல் கூற்றில், "பிதாவே, இவர் களுக்கு மன்னியும்" என்பதே. "ஒருவருக்கொரு வர் தயவாயும் மனவுருக்கமாயும் இருந்து, கிறிஸ்து வுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்று

எபேசு விசுவாசிகளுக்கு எழுதியதையடுத்து உடனே, ''நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் **தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்''** என்ற சவாலைப் பவுல் அவர்கள்முன் வைத்தார் (எபே 4:32; 5:1). நாம் இயேசுவைப் போல் நடக்காவிடில், அடிக்கடி தவறிழைப்போரை மன்னிக்க முடியாது.

# 9

# முழுநேரப் பணிக்கான இறையழைப்பிற்குக் கீழ்ப்படிவதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

இயேசுவின் அழைப்பிற்கு உடனடியாய்க் கீழ்ப்படிந்து முழு நேரமாய் அவரைச் சேவிக்கப் புறப்பட்டோர் பலர். பேதுருவும் அந்திரேயாவும் முதலில் வருகின்றனர். இயேசு அவர்களிடம், ''**என் பின்னே வாருங்கள்;** உங்களை மனிதரைப் பிடிப்போர் ஆக்குவேன்'' என்றார் (மத் 4:19). அவர்கள் உடனே தங்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின்சென்றனர் (வச 20). அடுத்து யாக்கோபும் யோவானும் வருகின்றனர். ''அங்கிருந்து செல்கையில் வேறு இரு சகோதரராகிய யாக்கோபும் யோவானும் தங்கள் தந்தையுடன் படகிலிருந்து வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த போது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படகையும் தங்கள் தந்தையையும் விட்டு அவருக்குப் **பின்சென்றனர்''** (மத் 4:21,22). முதலிருவரும் தங்கள் தொழிலை (வலை) விட்டனர்; அடுத்த இருவரும்

தங்கள் தொழிலை மட்டுமல்ல, தங்கள் குடும்பத்தையும் (தந்தை) விட்டனர். இயேசுவின் அழைப்பிற்குக் கீழ்ப்படிய இரு மகன்கள் இரு குடும்பங்களைவிட்டுப் புறப்பட்டதைக் கற்பனை செய்து பாருங்கள்! இந்நாட்களில் ஒரு பிள்ளையைக்கூட முழுநேர இறைப்பணிக்கு அனுப்பி வைப்பது அபூர்வமாகிவிட்டது. "என்னைப் பின்பற்றி வா" என்றதும் மத்தேயு தனது வரித்துறை அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டார் (மத் 9:9). அவர் ஓர் எழுத்தாளர் ஆனார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் இயேசுவில் நிறைவேறுவதை அழகாய் எடுத்துக்காட்டும் முதலாம் சுவிசேஷத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்!

மற்றவர்களை முழுநேர இறைப்பணிக்காய்த் தம்மைப் பின்பற்றும்படி இயேசு அழைக்குமுன், அவரே புறப்பட்டுச் செல்லத் தன்னார்வலராய் முன்வந்தார். மக்களை இரட்சிப்பதற்காய் இப்பூவுலகிற்குள் வர இயேசு முன்வந்ததை நிழலாய்த் தீர்க்கன் ஏசாயாவின் அழைப்பில் காண்கிறேன். யார் "நமக்காய்ப்" போவான் என்று திரித்துவ தேவன் கேட்பதாகக் கற்பனை செய்கிறேன் (ஏசா 6:8). அதற்கு இயேசுவின் பதில்: "இதோ, நான் இருக்கிறேன்; என்னை அனுப்பும்!" இது தேவையற்ற கற்பனை என்று சொல்வதற்கில்லை; ஏனெனில், உவமைகள் மூலம் போதிப்பதை ஏசாயா 6:9,10இன் நிறைவேறுதலாய் இயேசு தாமே குறிப்பிடுகிறார் (மத் 13:13-15). இவ்வித வியாக்கியானத்தைத் தீர்க்கதரிசனத்தில் இயேசு ஏசாயா 48:16இல் உறுதிப்படுத்துகிறார்: "ஆதி காலம் துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவரு

டைய ஆவியும் என்னை அனுப்புகிறார்கள்.'' எபிரெய நிருப ஆக்கியோன் இதை இன்னும் விவரிக்கிறார்: ''இயேசுவானவர் உலகில் நுழையும் போது: தேவனே, உமது சித்தப்படிச் செய்ய, இதோ, வருகிறேன்; புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்றார்'' (எபி 10:5-7; சங் 40:6-8). சரித்திரத்திலேயே மிகப் பெரிய தன்னார்வலர் இயேசுவே. நாம் தேவனது ''அழைப்பு'' என்பதற்கே கீழ்ப்படிவதில்லை; இயேசுவோ தேவனுக்குக் கீழ்ப்படியத் ''தெரிவு'' செய்தார்! முன்னோடி மிஷனரிகளான டேவிட் லிவிங்ஸ்டன், ஹட்சன் டெய்லர், அதோனிராம் ஜட்சன் மற்றும் மேரி ஸ்லெசர் போன்றோர் தன்னார்வலர்களாய்த் ''தெரிவு'' செய்தனர். மோசே ''தெரிவு'' செய்தான் (எபி 11:24-26). இந்நாட்களில், மிஷனரிப்பணி குறித்துப் பேசுகையில், நாம் ''அழைப்பு'' (call) என்பதைத்தான் வலியுறுத்துகிறோமே தவிர ''தெரிவு'' (choice) என்பதைக் குறிப்பிடுவதேயில்லை. மிஷனரிப்பணிக்கு வருவோரின் தரம் குறைந்துவருவதில் ஆச்சரியமில்லையே. நன்கு படித்தவர்கள் நடுவிலிருந்தும் மிஷனரிப்பணிக்கு வருவோரின் எண்ணிக்கை வெகுவாய்ச் சரிந்துவிட்டது. 1975ஆம் ஆண்டு நான் எனது பொறியியல் தொழிலை விட்டு முழுநேர இறைப்பணிக்கு வந்ததை ''அழைப்பு'' என்பதைவிடத் ''தெரிவு'' என்றே சொல்வேன்.

நிறையச் சம்பளம் வாங்கும் கிறிஸ்தோருக்கு எனது கேள்வி: ''போதுமான அளவு சம்பாதித்த பின்னர் நீங்களாகவே வேலையிலிருந்து ஓய்வு பெற்றாலென்ன? எவ்வளவுதான் போதும்?'' எக்காலத்திலும் தேவன் ''நமதை'' விட ''நம்

மையே" விரும்புகிறார் (2 கொரி 8:5). உங்கள் வாழ்வின் உசிதமான பகுதி முழுவதையும் பணம் சம்பாதிப்பதற்கென்றே செலவழிப்பானேன்? "போதுமெனும் மனதுடனுள்ள தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" (1 தீமோ 6:6). உங்கள் நேரம் முழுவதையும் இறைப்பணியில் செலவழிக்கலாம் என்பது உங்களுக்கு அவ்வளவு விருப்பமில்லை யெனில், திருப்பணிக்காய் முழுநேரமாய்ச் "சம் பாதிப்பவராய்" ஏன் மாறக்கூடாது? உங்கள் எதிர் காலத்திற்கும், பிள்ளைகள் தங்கள் வாழ்க்கை யைத் தொடங்குவதற்கும், ஓரளவு சேமித்த பின் னர், உங்கள் பணிக்காலத்தில் மீதியுள்ள ஆண்டு களை முழுவதும் இறைப்பணிக்காகவே சம்பா திக்கச் செலவிடலாமே! தனக்கிருந்த எல்லாவற் றையும் காணிக்கையாய்ப் போட்டுவிட்ட அந்த ஏழை விதவையையும், தனது சேமிப்பு எல்லா வற்றையும் கொண்டு வாங்கிய விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றிவிட்ட அப்பெண்மணியையும் அவர் உயர்வாய்ப் பேச வில்லையா? ஒரு யோவன்னாளாய் இருங்கள்! ஒரு சூசன்னாளாய் இருங்கள்! (லூக் 8:1-3). நான் இங்கு எழுதுவது உங்களுக்குப் பிடிக்காதிருக் கலாம்; ஆனால் இதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் நித்தியத்தில் வருந்தமாட்டீர்கள் (மத் 6:19-21). இந்தியக் கிறிஸ்தவர்கள் இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்வார்களானால், இந்தியாவில் நடக்கும் இறைப்பணிகளுக்கு வெளிநாட்டுப் பணம் தேவையிருக்காது. சொல்லப்போனால், நம்மை விட எளிமையிலிருக்கும் நாடுகளுக்கு நாம் பணம் அனுப்பிவைக்கலாம் (2 கொரி 8:13-15)! தமக்கிருந்த அனைத்தையும் நம்மைச் செல்வந்த ராக்கக் கொடுத்துவிட்டத் தலைவரைப் பின் பற்றும் புரட்சிகரச் சீடராய் மாறுவோம்! (வச 9).

எனக்கு இன்னொரு கேள்வி: முழுநேரப் பணியாளரை நாம் எந்த அளவு மதிக்கிறோம்? நமது இல்லங்கள், வாகனங்கள், உடைமைகள் மற்றும் ஆசிகளை அவர்களுடையவைபோல் அவர்களும் அனுபவிக்க நாம் விட்டுவிடவேண்டு மென இயேசு எதிர்பார்க்கிறார் (மாற் 10:28-30)! முழுநேரப் பணியாளருக்கு நாம் பெற்றோரும், சகோதர சகோதரிகளுமாகவேண்டும். ''ஒரு கலசம் தண்ணீர்'' என்பது ஓர் எடுத்துக்காட்டுதான்; அதோடு நின்றுவிடக்கூடாது (மத் 10:40-42). உத்தமமான ஊழியர், அதிலும் குறிப்பாய்த் திரு வசனத்தையும் ஆரோக்கிய உபதேசத்தையும் போதிப்பவர், ''இரட்டைக் கனம்'' பெறவேண்டும் என்றார் அப்போஸ்தலன் பவுல் (1 தீமோ 5:17). ''இரட்டைக் கனம்'' என்றால் இரு முறை ''பிரெய்ஸ் த லார்ட்'' சொல்வதல்ல. அது பொரு ளாதார ஈகையைக் குறிக்கும் (வச 18).

## 10

## வழிவிலகல்களைத் தவிர்ப்பதில் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

ஓர் ஆட்டிடையனுக்கும் ஆடுகளுக்குமுள்ள உறவைவிட இயேசுவோடு நமக்குள்ள உறவை உருவகப்படுத்துவது வேறெதுவுமில்லை. பழைய ஏற்பாட்டிலுள்ள 23ஆம் சங்கீதமும், புதியதிலுள்ள யோவான் 10ஆம் அத்தியாயமும் இறைமக் களுக்குப் பெரிதும் விருப்பமானவை. இந்தக் கருத்தில் டாரதி A. திரப் (1799-1847) அம்மை

யார் இளைஞருக்கென அருமையானதொரு பாடல் இயற்றியுள்ளார் —

*மேய்ப்பன் போல முந்திச் சென்றும்*
*பாதுகாத்தும் வருவீர்;*
*ஜீவத் தண்ணீரண்டை என்றும்*
*இளைப்பாறச் செய்குவீர்.*

*இயேசு நாதா, இயேசு நாதா,*
*மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்*
*இயேசு நாதா, இயேசு நாதா,*
*ஊழி காலம் வாழ்விப்பீர்.*

நமது கருப்பொருளின் தியானத்திற்காய் யோவான் 10:3-5ஐக் கவனிப்போம். "வாசல் காப்போன் மேய்ப்பனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன. அவன் தனது ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். அவன் தனது ஆடுகளை வெளியே விட்டபின், அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்; ஆடுகள் அவனது சத்தத்தை அறிந்திருக்கிறதால் அவனுக்குப் **பின்செல்லுகின்றன.** அந்நியருடைய சத்தத்தை அறியாததால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டு **ஓடிப்போகும்.**" இயேசுவை எவ்வளவு நெருக்கமாய்ப் பின்பற்றுகிறோமோ அந்த அளவுக்குத்தான் வழிவிலகல்களை நாம் தவிர்க்க முடியும். "அந்நிய சத்தங்கள்" கவரத்தான் செய்யும். ஆனால் அவை மெற்றிவிடும். தம்மை நெருக்கமாய்ப் பின்பற்றுவோருக்குத்தான் நிதானிக்கும் ஆவியை இயேசு அருளுகிறார்.

எபிரெயர் 13:8 எல்லாருக்கும் பிரியமான வசனம்: ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.'' இவ்வாக்கியத்தைத் தொடர்ந்து உடனே வரும் வசனத்தைக் கவனித்திருக்கிறீர்களா? ''பலவித அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள்'' (வச 9). இறைமக்களை ஏமாற்றி, அவர்களைக் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு வரவிடாதபடித் தடுக்கும் அந்நிய போதனைகள் புயல் போன்று வீசியவண்ணமிருக்கின்றன (எபே 4:14,15). கவனம்! ''அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர்''ஆகிய உதவி மேய்ப்பர்கள் மூலம் பிரதான மேய்ப்பர் நம்மை இன்று நடத்துகிறார் (வச 12,13). இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றுவோர் நூதனங்களால் பரவசமடையமாட்டார். ''புல்லுள்ள இடங்களுக்கும் அமர்ந்த தண்ணீர்களுக்கும்'' மாற்றுக்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (சங் 23:1,2).

தலையானவராகிய இயேசுவைப் பற்றிக்கொண்டிராதிருக்கும்போதுதான் வஞ்சகங்களுக்குள் சிக்கிவிடுவோம் (கொலோ 2:18,19). யோவான் சுவிசேஷத்தில் இயேசு தம்மைத் தீயவற்றிலிருந்து பல இடங்களில் வேறுபடுத்திக் காட்டுகிறார். இருட்டுச் செயல்களுக்கு எதிரான ''மெய்யான'' ஒளி அவரே (யோ 8:12; 1:7-9). அவரே ஒரே வாசல்; திருடரோ ஜன்னலை உடைத்து உள்ளே வருவர் (10:1,7-10). கனியற்ற திராட்சைச்செடியாகிய இஸ்ரவேலரைப் போலல்லாது அவரே ''மெய்யான'' திராட்சைச்செடி (15:1; ஓசி 10:1). தன்னலத் தலைவர்களுக்கு மாற்றாக

அவரே "நல்ல" மேய்ப்பர் (யோவா 10:11-18). உடலுக்குரிய ஆதாரம் போல் அல்லாது அவரே நித்திய வாழ்வுக்கான "ஜீவ" அப்பம் (யோவா 6:35). நமக்கு வேறொன்று வேண்டுமா? நாம் எந்த வாட்டுக் கவலைகளுக்கும் பயப்படவேண்டுமோ?

இயேசு தமது முழுமைக் வாழ்விலும் பணியிலும் வழிநிலைகளை உடனுக்குடன் அடையாளம் கண்டார். தாம் அடையப்போகிற கொடூரமரணம் குறித்து அவர் முன்னறிவித்தபோது, அவரது நெருங்கிய சீடன் சீமோன் பேதுரு அவர் மீதுள்ள பாசத்தால், அவரைக் "கடிந்துகொள்ளுவகிறுத்த" சென்றார்; உடனே இயேசு அவரைப் பார்த்து, "அப்பாலே போ, சாத்தானே! நீ தேவனுக்குரியவைகளைச் சிந்திக்காமல் மனிதருக்குரியவைகளைச் சிந்திக்கிறாய்" என்று கடுமையாய்ப் பதில் சொன்னார் (மாற் 8:31-33). அதைத் தொடர்ந்து அவர் உடனே போதித்தது என்னவெனில், அவரைப் பின்பற்ற வேண்டுமானால் தன்னை மறுப்பதும் சிலுவை சுமத்தலும் தவிர்க்க முடியாதவை என்பதே (வச 34). "மனிதருக்குரியவை" என்று இயேசு சுட்டிக்காட்டியது உலக ஆசீர்வாதங்களில் அளவுக்குமீறிய ஈடுபாடு என்பதையே குறிக்கும்; அது நம்மைக் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவராக்குகிறது (பிலி 3:18,19). துர்ப்பாக்கியமாக, இதுதான் இன்றையப் பிரபலப் போக்காகவும், இயேசுவைப் பின்பற்றுவோருக்குப் பிசாசின் தந்திரமான சவாலாகவும் இருக்கிறது.

கிறிஸ்தவ ஓட்டத்தில் அங்குமிங்கும் பார்ப்பது போராட்டம். எனவேதான் இயேசுவைப் பார்ப்

பதை விட்டு நமது கண்களை அகற்றக்கூடாதென அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம் (எபி 12:2). இங்கும் ''சிலுவைதான்'' வருகிறது பாருங்கள். சிலுவையற்ற கிறிஸ்தவம் பெரும் கவர்ச்சி; ஏராளமான கிறிஸ்தவர் இதனால்தான் வழிவிலகுகின்றனர். கவனம்! விழிவிலகல் என்பது உங்கள் ''ஆதி அன்பையும்'' ''துவக்க விசுவாசத்தையும்'' கொன்றுவிடும் (வெளி 2:4: 1 தீமோ 5:12). வஞ்சிக்கப்படுதலும் விழுந்துவிடுதலும் குறிப்பாய் முன்னறிவிக்கப்பட்டுள்ளன (2 தெச 2:3). 2 தெசலோனிக்கேயர் 2ஆம் அத்தியாயம் முழுவதையும் வாசித்துப்பார்த்து முன்னெச்சரிப்படையுங்கள்.

இயேசுவைப் பின்பற்றும் உடன் சகோதர சகோதரிகளே, சங்கீதம் 86:11ஐ நமது அனுதின ஜெபமாக்குவோம்: ''கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும்; நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்!''

*இயேசுவைப்போல் அழகுள்ளோர்*
*யாரையும் இப்பூவினில் — இதுவரை*
*கண்டதில்லை, காண்பதுமில்லை.*

*பூரண அழகுள்ளவரே*
*பூவில் எந்தன் வாழ்க்கையதில்*
*நீரே போதும் வேறே வேண்டாம்*
*எந்தன் அன்பர் இயேசுவே*
*மண்ணுக்காக மாணிக்கத்தை*
*விட்டிட மாட்டேன் — வெறும்*

— பொன்னம்மாள் சந்நியாசினி

[illegible]

## [illegible]
## [illegible]

[illegible]

[illegible] (வெளி 12:20,21) [illegible]

23ஆம் வசனம் ஆங்கிலத்தில் ''ஆனால்'' என்றும், தமிழில் ''அப்பொழுது'' என்றும் துவங்குகிறது. இயேசுவின் பதிலைக் கவனியுங்கள்: ''மனுமகன் மகிமைப்படவேண்டிய வேளை வந்தது. மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்துவிட்டாலோ மிகுந்த பலனைக் கொடுக்கும். தனது உயிரை நேசிக்கிறவன் அதை இழந்துபோவான்; இவ்வுலகில் தனது உயிரை வெறுக்கிறவனோ அதை நித்திய வாழ்வுக்காலமாய்க் காத்துக்கொள்வான். ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால் என்னைப் **பின்பற்றட்டும்**'' (வச 23-26). இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து இயேசு சொன்னது: ''இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது'' (வச 27). ''பாடுகள் இல்லாது மகிமைப்படுதல் இல்லை, மாள்வு இல்லாது வாழ்வு இல்லை'' என்ற தத்துவத்தையே இங்கு இயேசு நிலைநிறுத்துகிறார். நாம் வெறுமனே இயேசுவின் ரசிகர்களா, அல்லது அவரது பாடுகளில் அவரோடு நம்மை அடையாளப்படுத்திக்கொள்ள ஆயத்தமுள்ள சீடர்களா? Fans or Followers?

வாழ்வோ மாள்வோ, ஆசீர்வாதமோ பாடுகளோ, இவை எதுவானாலும், எங்கிருந்தாலும், இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றுவோர், அங்கு துணிந்து செல்ல ஆயத்தமாயிருப்பர். அவர்களது தலைவர்மீது அவர்களுக்கிருக்கும் அன்பை விட்டு யாரும் அவர்களைப் பிரிக்க முடியாது (ரோ 8:35-39). எருசலேமுக்குள் அல்ல, நகருக்கு வெளியே, ''வாசலுக்குப் புறம்பே,''

இயேசு சிலுவையிலறையப்பட்டார் (எபி 13:12). இச்சரித்திர நிகழ்வு நமக்கோர் ஆன்மீக அழைப்பு தருகிறது: "ஆகையால், நாம் இயேசுவின் நிந்தையைச் சுமந்து, பாளையத்திற்குப் புறம்பே போவோம்" (வச 13). இதற்குக் காரணம்: "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரவிருப்பதையே நாடித் தேடுகிறோம்" (வச 14). நாம் இயேசுவைப் பின்பற்றுபவரானால், மண்ணைச் சிந்தைக்கு எதிராக விண்ணைச் சிந்தையில் வளர்த்துக்கொண்டிருப்போம். இதுவே அமிலப் பரிசோதனை.

நமது வாழ்வில் ஏதோவொரு காலக்கட்டத்தில் துன்பக் கிண்ணம் நமது கரங்களில் வந்துசேரும். "இதில் நான் பருகவேண்டுமா?" என்பதுதான் நமது இயல்பான கேள்வியாயிருக்கும். ஆனால் இயேசுவைப் பின்பற்றினால், அவரோடு சேர்ந்து, "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனா?" என்று கேட்போம் (யோ 18:11). பாடுகளைத் தவிர்ப்பதற்காகப் பேதுரு போல மாம்சீக முறைகளை நாம் கையாளக்கூடாது (வச 10). கசப்பான பாத்திரம் நமக்கு வரும்போது மக்களோடு கசப்புணர்வு கொள்வது இறைச் சித்தத்திற்கும் இறைநோக்கிற்கும் எதிர்த்துச் செயல்படும். கர்த்தருடைய பந்தியில் சேரும் போதெல்லாம் இதை நினைவிற்கொள்வோம்.

இதுவரையில்லாத பிரபலம் இன்று கிறிஸ்தவத்தில் தவறானதொரு போதனைக்குக் கிடைத்துள்ளது. "இயேசு பாடனுபவித்துவிட்டதால் நாம் பாடுபடவேண்டியதில்லை" என்று அறியாமையிலிருப்போரை இவ்வுபதேசம் ஏமாற்றுகிறது.

இவ்விதப் போதனைக்கு எதிராகத்தான் இயேசு சொன்னது: ''பச்சை மரத்துக்கு இப்படிச் செய்தால் பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?'' (லூக் 23:31). இயேசுவோடு ஐக்கியம் என்பது ஆசீர்வாதத்திற்காக மட்டுமல்ல, அவரது ''பாடுகளின் ஐக்கியமும்'' நமக்குண்டு (பிலி 3:10). அப்போஸ்தலன் பவுலின் சாட்சியைக் கவனியுங்கள்: கொலோ 1:24, ''இப்பொழுது நான் உங்களுக்காய் அனுபவிக்கும் பாடுகளில் மகிழ்ந்து, கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை அவரது உடலாகிய சபைக்காக, எனது உடலில் நிறைவேற்றுகிறேன்.'' இவ்விதம் நிறைவேற்றுவதில் நம் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. இவ்வித மனப்பான்மையின்றி நான் இயேசுவைப் பின்பற்றுகிறவனாயிருக்க முடியாது. அப்போஸ்தலர் 1:8 இலுள்ள ''சாட்சிகள்'' என்பதற்கு அடிப்படையான பதம் ''இரத்தசாட்சிகள்'' என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நமது ஆடைகளைத் தூய்மையாக்கும் சோப்பு பாடுகளே (வெளி 7:13,14). ஆடுகளாகிய நம்மோடு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள மேய்ப்பராகிய கிறிஸ்துவே ஓர் ஆட்டுக்குட்டியாகிறார்! தம்மைப் பின்பற்றும் யாவரையும் அவர் ''ஜீவத் தண்ணீருள்ள ஊற்றுகளுக்கு'' வழி நடத்துவார் (வச 17). ''தேவன்தாமே அவர்களது கண்ணீர் யாவையும் துடைப்பார்!''

*என் மீட்பர் சென்ற பாதையில்*
*நீ செல்ல ஆயத்தமா?*
*கல்வாரி மலைப் பாதையில்*
*பங்கைப் பெறுவாயா?*

*சிலுவையை நான் விடேன்*
*சிலுவையை நான் விடேன்*

திருமுழுக்குத் தொட்டியைச் சுற்றி நின்று பொதுவாகப் பாடப்படும் பல்லவி, "இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!" என்பதே. "துணிந் தேன்" என்ற சொல்லைக் கவனியுங்கள். ஆம், இயேசுவைப் பின்பற்றுவது சவாலும் வீரமும் நிறைந்தது; ஆனால் ஆபத்தானதல்ல!

இயேசுவைப் பின்பற்றுவோர் இயேசுவைப் பின்பற்றுவோரை எழுப்பவேண்டும். அதுதான் பவுலடியார் செய்தது. அவர் கொடுத்த அழைப்பு: 1 கொரி 11:1, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களா யிருங்கள்!" இன்னொரு இடத்தில் அவர் எழுதி யது: 4:16, "என்னைப் பின்பற்றுகிறவர்களா யிருங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லு கிறேன்!" "கிறிஸ்துவுக்குள்ளான தனது நடக்கை களைத்" தெரியப்படுத்தத் தனது விசுவாசக் குமாரனாகத் தீமோத்தேயுவை அறிமுகப்படுத்து கிறார் (வச 17). "கிறிஸ்துவை நாம் பின்பற்ற வேண்டும்; அவரைப் பின்பற்றுவோரை எழுப்ப வேண்டும்" — இதுவே நமது இரட்டை அர்ப் பணிப்பாயிருக்கட்டும்!

*இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்*
*விசுவாசத்தில் முன் நடப்போம்*
*இனி எல்லாருமே அவர் பணிக்கெனவே*
*ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்*

*நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே*
*அதிவேகமாய்ச் செயல்படுவோம்*

— அண்ணன் எபில் ஜெபசிங், 1941-2013

**கிறிஸ்தவ வாழ்வில் நிறைவாய் வளர உணவளிக்கும் ஒரு தினசரித் தியான நூல் ...**



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில் எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

*அனைத்துச் சபையினரும்...*
*அனைத்து வயதினரும்...*
*அனைத்துத் துறையினரும்...*
*விரும்பி வாசிக்கும்*
*ஒரு புதிய படைப்பு!*

432 பக்கங்கள்; விலை ரூ. 150/-;
அனுப்பச் செலவு ரூ. 50/-

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

## முடிவு வரிகள் ...

- இச்சிறுநூலை உங்களிடம் வைத்துக்கொண்டு அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்ளப் பயன் படுத்துங்கள்.

- உலகும், குறிப்பாக இந்தியாவும், கிறிஸ்தவத் திற்கு அதிகமதிகமாய் எதிர்ப்பாகிவரும் இந்நாட் களில், கிறிஸ்துவை "விசுவாசிக்கும்" யாவரும் அவரை உத்தமமாய்ப் "பின்பற்றுவோராகவும்" மாறாவிடில் "தீங்கு நாளில்" தாக்குப்பிடிக்க முடியாது. எனவே உங்களது கிறிஸ்தவ நண்பர் யாவருக்கும் இந்நூலை விநியோகியுங்கள்.

- உபத்திரவ காலத்தில் கிறிஸ்தவர்கள் முறிந்து போகாது நிமிர்ந்து நிற்கும்படிச் சபை மேய்ப்பர்கள் இச்செய்தியைச் சபையாருக்கு விளக்கமாய்ப் போதிக்கும்படி வருந்திக் கேட்கிறேன். இச்சிறு நூலைச் சீடத்துவ மற்றும் தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களில் பயன்படுத்துங்கள்.

- பிரதியொன்றின் விலை ரூ. 15/- மட்டுமே. எனவே மொத்தமாய் வாங்கினாலும் தள்ளுபடி கிடையாது.

- இச்செய்தி ஆங்கிலத்தில் ஆசிரியரின் இணைய தளத்தில் *(stanleyonbible.com)* உண்டு. எங்கு முள்ள கிறிஸ்தவருக்கு இதனை அனுப்பிவையுங் கள். அவர்கள் சவால் பெறுவர், ஊக்கம் அடைவர்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

# இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!

இயேசுவை விசுவாசிப்போர் பலர்;
அவரைப் பின்பற்றுவோரோ சிலர்.
அநேகர் இயேசுவிடம் வருவர்;
வெகு சிலரே அவரைப் பின்பற்றுவர்.
இயேசுவை விசுவாசிப்பது சிலாக்கியங்களுக்காக;
அவரைப் பின்பற்றுவதோ பொறுப்புகளை ஏற்க.
இயேசுவைப் பின்பற்றுதலைச் சார்ந்த 10 அம்சங்களை
ஆசிரியர் இந்நூலில் விளக்குகிறார்.

1. ஆத்துமாதாயம்
2. பரிசுத்த வாழ்வு
3. முக்கியத்துவ வரிசை
4. பொருளாதாரச் சிந்தை
5. வசதிகள்
6. என் சொந்த வழி
7. அன்பு
8. முழுநேர இறைப்பணி
9. வழிவிலகல்கள்
10. பாடுகள்

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>